THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have no information on the nature of the recommendations made by the Technical Committee on Heavy Electrical Projects and whether they have been accepted by the Government of India. The Government of India are, however, taking steps to set up a High Pressure Boiler Plant near Tiruchirappalli.

SRI S. RAMALINGA PADAYACHI : கனரக மின்சாரத் தொழிற்சாலை வைப்பதற்குத் திருச்சிதான் தகுதியான இடம் என்று நிபுணர் குழு சிபார்சு செய்திருந்தும், அதை மத்திய சர்க்கார் ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை ? அத்தகைய தொழிற்சாலையொன்றை ஆந்திரத்தில் வைக்கப்போவதாகக் கேள்விப்படுகிறோம். அம்மாதிரி வேறுவிதமான ஏற்பாடு நடக்கிறதா என்று தெரிவிக்க முடியுமா ?

7th December 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இரண்டாகப் பிரித்து ஒன்றைத் திருச்சியிலே வைக்கிறார்கள். ஹை ப்ரெஷர் பாய்லர் ப்ளான்ட் ஒன்று திருச்சியருகில் வைக்கப்படுகிறது.

Thefts in trains

* 2139 *Q*.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) with reference to the answer given to Question No. 298, dated 31st January 1961, whether the culprit was prosecuted and convicted ; and

(*b*) whether any other articles stolen from the same compartment or from the same train were also recovered from the culprit?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) No, Sir.

SRI T. S. RAMASWAMI : May I know why the culprit was not prosecuted when he was caught red-handed and articles were recovered and promptly returned to the Hon. Minister concerned?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, those in charge of the prosecution found that there was no adequate evidence to prosecute the culprit.

Deputation for studies (Agriculture)

*** 2140 *Q*.—SRI M. P. SARATHI :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நவீன விவசாய முறையில் பயிற்சி பெறுவதற்காக இந்த மாநிலத்திலிருந்து வெளிநாடுகளுக்கு 1959-60, 1960-61-ம் ஆண்டுகளில் எத்தனை பேர் அனுப்பப்பட்டுள்ளனர் ?

(இ) எந்தெந்த நாடுகளில் பயிற்சி பெறுகிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : A statement[a] is placed on the table of the House.

Secondary Grade Teachers (Pay)

* 2141 *Q*.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the scales of pay allowed to a secondary grade teacher handling 5th standard, (i) in an elementary school, (ii) in a higher elementary school, and (iii) in a high school ; and

(*b*) the reasons for allowing higher grade pay to secondary grade teachers handling 5th standard in higher elementary schools?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Rs. 90—4—110—3—140 if the teacher holds a sanctioned secondary grade post.

(*b*) the individual may not be working in a sanctioned secondary grade post.

[a] Printed as Appendix II on pages 106–109 *infra*.

SRI M. S. SELVARAJAN : ஹைஸ்கூல்களிலும் ஆரம்பப்பாட சாலைகளிலும் வகுப்பில் ஆங்கிலம் போதிக்கப்படுவதுபோல் ஹயர் எலிமெண்டரி ஸ்கூல்களில் 5-வது வகுப்பில் ஆங்கிலம் போதிக்கப் படவில்லையா ? அப்படி போதிக்கிற செகண்டரி கிரேட் ஆசிரியர் களுக்கு ஹையர்கிரேட் ஆசிரியர் சம்பளம் கொடுக்காமல் மற்ற செகண்டரி கிரேட் ஆசிரியர்களை ஒப்ப, கொடுக்கவேண்டியது நியாயம் இல்லையா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நியாய அநியாயம் இதில் ஒன்றும் கிடையாது. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் எவ்வளவு செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் இருக்கலாம் என்று உள்ளது. அதற்கு மேல் அதிகமாக செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் இருந் தால் அவர்கள் ஹையர் கிரேட் ஆசிரியர் போஸ்டில்தான் காட்டப் படுகிறார்கள். ஆகவே இவர்கள் ஹையர் கிரேட் ஆசிரியர் சம்பளம் பெறுகிறார்கள். அப்படியின்றி எல்லோருக்கும் ஒரே கிரேட் கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் நினைத்தாலும் அப்படிச் செய்வதற்கு கல்வி பட்ஜெட் போதாது.

SRI J. MATHA GOWDER : ஐந்தாவது வகுப்புக்கு மேலே யுள்ள வகுப்புகளுக்கு செகண்டரி கிரேட் ஆசிரியர்களைத்தான் நியமிக்கவேண்டும் என்று இருக்கிறது. இப்போது ஐந்தாவது வகுப்பிலேயே ஆங்கிலம் கற்றுத்தர ஆரம்பித்திருப்பதால் ஐந் தாவது வகுப்புக்கும் செகண்டரி கிரேட் ஆசிரியரையே நியமிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இப்படி வேலை செய்கிற செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும், உரிய சம்பளத்தைக் கொடுத்தால்தான் மனதில் சந்தோஷத்தோடு வேலை செய்வார்கள். அப்படிச் செய்ய முன்வருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது ஐந்தாவது வகுப்புவரையில் இருக்கிற பள்ளிக்கூடத்தில்கூட ஒரு செகண்டரி கிரேட் டீச்சராவது இருக்கவேண்டுமென்று உத்தரவு போடப்பட் டிருக்கிறது. அவர்களுக்கு செகண்டரி கிரேட் சம்பளமே கொடுக் கப்படுகிறது.

Madurai District Board Teachers (Salaries)

*2142 *Q*.—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா போர்டு ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பது காலதாமதமாகக் காரணம் என்ன ?

(இ) பிரதி மாதம் 1 முதல் 5 தேதிக்குள் சம்பளம் கொடுக் கும்படி உத்திரவிடுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) There was no delay in the payment of salaries to the District Board High School teachers. There was some delay in paying salaries to a few elementary school teachers during the months from August 1960 to July

7th December 1961]

1961, due to (1) the non-receipt of bills in time from those teachers and (2) receipt of defective bills which had to be returned for rectification of defects.

(இ) The District Boards have been abolished on 2nd October 1961. Instructions have been issued to the successor bodies, the Panchayat Union Councils, to pay salaries to teachers on the first working day of each month.

Sengal Odai Scheme

* 2143 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state when it is proposed to take up the execution of the Sengal Odai Scheme in Udayarpalayam taluk, Andimadam firka, sanctioned as early as in 1959?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A revised estimate amounting to Rs. 79,000 for the Sengal Odai Scheme in Udayarpalayam taluk in Tiruchirappalli district has been sanctioned in July 1961. The work will be taken up for execution early after calling for and settlement of tenders by the Superintending Engineer, Tiruchirappalli Circle.

Village officers

*** 2144 *Q.*—SRI K. ANBAZHAGAN :** *கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) தமிழ்நாடு கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம், அம்பாசமுத்திரம் வட்ட மாநாட்டில் 1960-ம் ஹு ஜூலைமீ 28உ நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அமைச்சருக்குக் கிடைத்தனவா ;

(இ) வைத்தியச் சலுகை, குழந்தைகட்கு கல்விச் சலுகை ஆகியவை அவர்கட்கு முழு அளவில் கிடைக்கச் செய்வது பற்றி அரசாங்கம் எடுத்த முடிவு யாது ?

(உ) கிராம உத்தியோகத்தினரது வேலை பளு மிகவும் பெருகி வந்துள்ளதால் அதைக் குறைப்பதுபற்றி அரசாங்கத்தின் கருத்து யாது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) **No, Sir.**

(இ) The village officers and servants have been given the same concessions as those given to the N. G. G. Os. The children of village officers are now given full fee remission for Forms I to III, and for Forms IV to VI half-fee concession if the total income of the parent exceeds Rs. 100 per mensem and full fee concession in other cases. The children of village servants are eligible for full fee remission for Forms I to VI.

(உ) The Government have not yet arrived at any decision in the matter.

SRI K. ANBAZHAGAN : *தலைவர் அவர்களே, கிராம உத்தியோகத்தில் இருப்பவர்களுடைய மாத வருமானம் 100 ரூபாய்க்கு மேல் இருந்தால் சலுகை கிடையாது என்றும், இல்லாதவர்கள்*

குழந்தைகளுக்குச் சலுகை உண்டென்றும் பாகுபடுத்துவது சரியா? என்.ஜி.ஓ.-க்களுக்கு இருப்பது போலவே மாத வருமானத்தைக் கருதாமல் இந்தச் சலுகையை எல்லா கிராம உத்தியோகஸ்தர்களுடைய குழந்தைகளுக்கும் அளிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இதிலே வருமானம் எவ்வளவு என்பதுதான் குறிக்கோள். குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இந்தச் சலுகை அளிக்கவேண்டும் என்பதுதான் கருத்து.

SRI S. NAGARAJA MONIGAR: இந்த கிராமாதிகாரிகளிலே எத்தனை பேர் ஆரியர்கள் இருக்கிறார்கள்? எத்தனை பேர் திராவிடர்கள் இருக்கிறார்கள்?

THE HON. SRI M. A. MANICKAVELU: திராவிட நாட்டிலே எல்லோரும் திராவிடர்கள் தான்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR: கிராமாதிகாரிகளுடைய வேலை இப்போது மிகவும் அதிகமாக ஆகியிருக்கிறது. நம் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தப்பட்ட எல்லாப் புள்ளிவிவரங்களையும் அவர்கள் தான் சேகரிக்கவேண்டியதாக இருக்கிறது. ஆகவே ஒரு நாளைக்கு 24 மணி நேரமும் அவர்களுக்கு வேலை இருப்பதனால் மற்ற என்.ஜி.ஓ.க்கள் எல்லோருக்கும் கொடுக்கிற சலுகைகளைக் கூட இவர்களுக்கும் மாத வருமானத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் கொடுப்பதற்குத் தடையாக இருக்கக்கூடிய காரணம் என்ன? எல்லோருக்குமே அந்தச் சலுகையைக் கொடுக்க முயற்சிப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இப்போது ஓரளவு வசதி செய்து கொடுத்திருக்கிறோம். இவர்கள் முழு நேரம் ஊழியர் அல்ல. அதை அந்த அடிப்படையில் மாற்றி அமைத்துவிட்டால் எல்லாம் சரியாகப் போய்விடும். இந்தச் சமயத்தில் எல்லோரும் கிராமாதிகாரிகளைப்பற்றி அக்கறை எடுத்துக்கொள்வது சகஜம் தான்.

SRI K. ANBAZHAGAN: கிராம அதிகாரிகளுக்கு வைத்திய நிர்வாக அதிகாரி உதவியில்லை என்ற புகார் இருக்கிறதே, அந்தச் சலுகையையும் அளிக்க நிர்வாக அதிகாரிகளுக்குத் தக்க உத்தரவு கொடுக்க முன்வருவார்களா? இதற்காக மூன்று அமைச்சர்களைக்கொண்ட குழு நியமிக்கப்பட்டதே, அந்த மூவர் குழு செய்த முடிவு என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU: அமைச்சர் குழு இதைப்பற்றி பரிசீலனை செய்தது. இப்போது நாம் டிரான்ஸிஷனல் ஸ்டேஜில் இருக்கிறோம். ஆகையால் பெரிய மாறுதல் இந்தச் சமயத்தில் வேண்டாமென்று ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஏதாவது புகார் செய்யப்பட்டால் பரிசீலனை செய்யத் தயார்.

SRI M. K. MARIAPPAN : கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தில் தலையாரி, வெட்டியான் இவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா? இல்லையென்றால் அவர்கள் தங்களுக்குள் ஒரு சங்கத்தை அமைத்துக்கொண்டால் அதற்கு சர்க்கார் அங்கீகாரம் அளிப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : வில்லேஜ் சர்வெண்ட்ஸ் என்ற காடிகரியில் அவர்களும் வருகிறார்கள்.

Deaths due to rat-poisoning

*** 2145 Q.—SRI S. M. ANNAMALAI :** கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம்மாநிலத்தில் 1961-ம் ஆண்டில் இதுவரை எத்தனை பேர்கள் எலிபாஷாணம், மூட்டைப்பூச்சி மருந்து தின்றதினால் இறந்துள்ளனர்?

THE HON. SRI M. A. MANICKAVELU : No information is available, as deaths due to these causes are not separately registered.

SRI S. M. ANNAMALAI : அடிக்கடி பத்திரிகையில் மூட்டைப் பூச்சி மருந்தை உண்டு பலர் மரிப்பதாகச் செய்திகள் வருகின்றனவே. இந்தத் தற்கொலைகளைத் தடுக்க மூட்டைப் பூச்சி மருந்து விற்பனையைக் கட்டுப்படுத்த சர்க்கார் முன்வருவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த மருந்து வழங்குவதில் கடுமையான ஏற்பாடு இருக்கிறது. அதோடு இந்த உலகத்தைவிட்டு மேல் உலகத்திற்குப் போக வேண்டுமென்ற முடிவுக்கு வந்துவிட்டவர்களை எப்படிப் பாதுகாப்பது? கூடிய வரையில் பாதுகாக்கிறோம்.

Karugamputhur Panchayat Board

*** 2146 Q.—SRI V. K. KOTHANDARAMAN :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா, வேலூர் தாலூகா கருகம்புத்தூர் பஞ்சாயத்து போர்டு தலைவர்பேரில் மேற்படி பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்கள் புகார் லெட்டர் வந்ததா?

(இ) என்னென்ன புகார், என்னென்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

(உ) இல்லையென்றால், அதற்கான காரணமென்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Yes, Sir. Several petitions have been received by the Collector of North Arcot.

[7th December 1961

(இ) A statement[a] containing the allegations against the President of the Karugamputhur Panchayat is placed on the table of the House.

The Collector as the Inspector of Panchayats is taking action against the president after calling for a detailed report from the Regional Inspector of Municipal Councils and Local Boards, North Arcot.

(உ) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN: கருகம்புத்தூர் பஞ்சாயத்துத் தலைவர் பேரில் திட்டவட்டமான குற்றச்சாட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. பஞ்சாயத்தில் தீர்மானம் போடாமல் காண்டிராக்ட் அளிப்பது, வேண்டாதவர்களுக்கு மீட்டிங் சர்குலர் அனுப்புவது கிடையாது, அக்ரிகல்சரல் . . . (குறுக்கீடு) இப்படி பல குற்றச்சாட்டுகளைக் கொடுத்தும் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம் என்ன? அவர் நடத்தக்கூடிய தொழிலுக்கு ஜோசப் என்ற பெயர் கொடுத்துக்கொண்டிருப்பதும் தெரிவித்திருக்கையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதிருக்கக் காரணம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பேரில் சட்டப்படிதான் நடவடிக்கை எடுக்க முடியும். புகார் வந்தவுடன் அவர்கள் தலையை வெட்டிவிட முடியாது. இதைப்பற்றி அவர்களிடம் தக்க சமாதானம் கோர வேண்டும். பிறகு அதன்பேரில் பஞ்சாயத்து என்ன முடிவு செய்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். அவசரப்பட்டு நடவடிக்கை எடுப்பதற்கு இல்லை.

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களில் நிர்வாகக் குறைகள் அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்ட பிறகு, அரசாங்க இலாகாக்களின் பங்கீட்டு முறை, ஆபீஸ் ஆப் தி இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் போர்ட்ஸ், செக்ரடேரியட் என்று தனித்தனியாக இரண்டு இலாகாக்கள் இருப்பதால் ஒரு குழப்பமான நிலைமை ஏற்படுகிற காரணத்தால் நல்ல முறையில் செயல்பட முடியவில்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இதை பரிசீலனை செய்து நல்லமுறையில் அமைக்க கனம் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதனால் குழப்பம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏதாவது குழப்பம் இருந்தால், அதை கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தால், அதைப்பற்றி கவனிக்க முடியும். இப்போது இந்த சட்டபூர்வமான நடவடிக்கை எடுப்பதற்கு கலெக்டர் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

[a] Printed as Appendix III on page 110 infra.

7th December 1961]

Medical examination of students

*** 2147 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN** : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

மாணவர்களை பரிசோதிக்க mobile medical van ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

The Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Works) Act

*** 2148 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பீடி தொழிற்சாலை சட்டத்தின் 3, 4-வது பிரிவுகளும், அதன் உப-பிரிவுகளும் அமுல் நடத்துவதற்காக சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

(இ) சட்டத்தின் 2 (g) பிரிவுபடியும், 2 (g) (ii) பிரிவு படியும் பீடி தொழிற்சாலை முதலாளிகள்மீதும் கூட்டாக நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

(உ) இல்லையென்றால் காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) All the Inspectors and Assistant Inspectors of Labour have been instructed to enforce the provisions of sections 3 and 4 of the Act strictly.

(இ) & (உ) It is not feasible to take collective action against the proprietors of beedi factories under sections 2 (*g*) and 2 (*g*) (ii) of the Act, as it could not be established that they alone were having the ultimate control of the affairs of the beedi industrial premises, and consequently, they could not be deemed to be the employers for the purpose of section 2 (*g*) of the Act.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், பீடி தொழிலாளர்களுக்காக வேண்டி நிறைவேற்றப்பட்ட சட்டத்தை இரண்டு வருஷத்திற்கு பிறகுகூட நிறைவேற்ற முடியாத அளவுக்கு ஒரு நிலைமை இருப்பதன் காரணமாக, இந்த மாதத்திலேகூட வேலூரிலே வி. அப்துல் ஜப்பார் பீடித் தொழிற்சாலையிலே ஆயிரம் பேருக்கு மேல் வேலை இல்லாத அளவுக்கு காண்ட்ராக்ட் முறையிலே மாற்றப்பட்டிருக்கிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, இந்த 2 (ஜி) பிரிவு, மற்றப் பிரிவுகள் ஆகிய முக்கியமானவைகளை தொழிலாளர்கள் நலனுக்காக உடனடியாக அமுலுக்கு கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எதெது அமுலுக்கு கொண்டு வரப்படவேண்டுமோ, அவைகள் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுத்தான் வருகிறது.

[7th December 1961

Elephant menace (Tenkasi and Shenkottai taluks)

* 2149 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the attention of the Government has been drawn to the damage caused to the wet crops and plantation and also to the panic created among the labourers by a wild rogue elephant in the borders of Tenkasi and Shenkottai taluks; and

(*b*) if so, the action taken to prevent this menace?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Under Board's Standing Order No. 196 (4), the single elephant reported to be causing trouble was declared as a rogue, so that it might be shot by any licensee. Subsequently, the elephant was not to be seen anywhere and the existence of the rogue elephant became doubtful. No further steps were, therefore, taken. Information was again received later that this elephant had uprooted some trees. On receipt of this information, the Collector of Tirunelveli published a notification in the District Gazette proscribing the elephant so that it might be shot dead in the forest area itself. Further action to shoot the elephant is being pursued.

Sri K. SATTANATHA KARAYALAR : இந்த யானை கேரள எல்லைக்குள் சரண் புகுந்து கொள்வதால், இதை இங்குள்ளவர்கள் அந்த அரசாங்கத்திற்கு எழுதி, அந்த யானையைச் சுடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : யானையாக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும் இந்த அரசாங்கம் ஒன்றும் செய்ய முடியாது.

Sri A. A. RASHEED : May I know, Sir, what is the extent of damage caused by this rogue elephant and was there any loss of life due to it?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I do not think there is any loss of life. There has been some damage to crops. But I do not have the correct assessment of loss caused by it.

Sri K. SATTANATHA KARAYALAR : ஸார், இந்த யானையை சில சமயங்களிலே காணவில்லை என்று சொல்லும் போது, அது கேரளாவை ஒட்டியுள்ள காட்டில் புகுந்து கொள்கிறது. ஆகவே, இந்த யானையைச் சுடுவதற்கு நடவடிக்கை எடுக்கும்போது, அந்தச் சர்க்காருக்கும் எழுதி அவர்களுடைய ஒத்துழைப்பையும் கோருவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த அரசாங்கம் ரோக் எலிபெண்ட் என்று முதலில் டிக்ளேர் செய்யவேண்டும். பின்னால் இந்த யானைதான் என்று சாட்சி சொல்லவேண்டும். இதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே, அந்த அரசாங்கத்திற்கு எழுதுவது முறையல்ல.

7th December 1961]

Roads (Paramakudi taluk)

DEPUTY SPEAKER : As the hon. Member who gave notice of Question No. 2150 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

*2150 *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the proposals for the formation of new roads in Paramakudi taluk (viz.), (i) from Nainarkoil to Devipatnam, (ii) from Ariankottai to Kavanoor, and (iii) from Ilayangudi to Nainarkoil have been sanctioned by Government; and

(*b*) if so, when the work will be taken up?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) : The proposal to sanction the formation of Nainarkoil to Devipattanam Road is under the consideration of the Government.

There is no proposal to sanction the other two works referred to as items (ii) and (iii).

Tibetian refugees

* **2151 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN** : கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் எத்தனை திபேத்தியர்கள் வந்துள்ளனர் ?

(இ) அவர்கள் என்னென்ன வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் ?

(உ) கொடைக்கானல்—ஊட்டி முதலிய பிரதேசங்களில் உள்ள நிலத்தை அவர்களுக்கு கொடுக்கப் போவது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Sixty-nine.

(இ) Some of them are employed as teachers, artisans and housewives; and the rest are studying or undergoing training.

(உ) There is no such proposal.

Private buildings for office accommodation (rent)

* **2152. *Q.*—SRI V. K. KOTHANDARAMAN** : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க அலுவலகங்களுக்காக, கட்டிடங்களுக்கு வருடந்தோறும் கொடுக்கும் வாடகைத் தொகை எத்தனை ரூபாய் ? ஜில்லாவாரியாக ?

(இ) சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கான முயற்சி உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : (அ) & (இ) Attention is invited to the paper[a] placed on the table of the House.

[a] Printed as Appendix IV on pages 111 infra.

[7th December 1961

Sri V. K. KOTHANDARAMAN: ஸார், மேஜை மீது வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலே ராஜ்ய சர்க்கார் காரியாலயங்கள் மிகப் பெரிய அளவிலே இருக்கக்கூடிய சென்னை ஜில்லாவிலே 3,97,000 ரூபாய் வாடகை கொடுக்கப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அடுத்தாற்போல், வட ஆற்காடு, கோயம்புத்தூர் ஜில்லாக்களுக்கும் 3 லட்சத்திற்கு வாடகை கொடுப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு வாடகை கொடுப்பதற்குக் காரணம் என்ன? ஆகவே, இந்த இரண்டு ஜில்லாக்களுக்கும் சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய திட்டமுண்டா? செய்யப்படுமா?

The Hon. Sri P. KAKKAN: இந்த இரண்டு ஜில்லாக்களுக்கும் மட்டுமல்ல, எல்லா ஜில்லாக்களிலுமே பெரிய கட்டிடங்கள் கட்டுவதற்கு நல்லதொரு திட்டம் வைத்திருக்கிறோம். அதற்கு வருஷம் ஒன்றுக்கு 50 லட்சம் ரூபாய் செலவு செய்வதென்று திட்டமிட்டு, நீண்டகாலத் திட்டம் ஒன்று போட்டிருக்கிறோம். அதே போல், இந்தச் சென்னை நகரிலேகூட அடுக்கு மாளிகைக் கட்டிடங்களை கட்டுவதற்குத் திட்டமிட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

Non-Gazetted officers (represenations)

***2153 Q.—Sri K. ANBAZHAGAN**: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசிதழ் பதிவில்லா அலுவலர்களிடமிருந்தும், கடைநிலை ஊழியர்களிடமிருந்தும் சமீபத்தில் மாற்றியமைக்கப்பட்ட அவர்களது சம்பள விகிதங்களிலுள்ள சில முரண்பாடுகள் சம்பந்தமாய் முறையீடுகள் எவையேனும் வந்தனவா?

(இ) அப்படியானால், அவைகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

The Hon Sri C. SUBRAMANIAM: (அ) & (இ) A memorandum was received from the Tamilnad Non-Gazetted Government Officers' Association by the Government requesting for further revision of scales of pay of certain categories of staff (including attenders) and improvement of other service conditions. After a detailed examination of the various requests of the Association, a reply was given to its Secretary in Government letter No. 96520/Spl/60-1, dated 5th June 1961.

Sri K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்கள் பல நிலையிலே ஏற்கனவே அளிக்கப்பட்ட சம்பளம் வழங்கப்படாமலும், புதிய சம்பளமாவது இன்னும் சிலருக்கு இன்னும் வழங்கப்படாமலும், சிலருடைய நிலை இன்னும் தெளிவாக்கப்படாமலும் இருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? எல்லோருக்கும் அவரவருக்குரிய ஊதியத்தை அளித்து விட்டதாக அமைச்சர் அவர்கள் உறுதி கூறுவார்களா?

7th December 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : கூடியவரையிலே, எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. யாராவது கொடுக்கவில்லை என்று கூறி இருந்தால், அது மாதிரிப்பட்ட விஷயங்கள் உண்மையாக இருந்தால் உடனடியாகப் பரிசீலனை செய்யப்பட்டு, தீர்க்கப்பட்டு வருகிறது. அதைப்போல் வந்த விண்ணப்பங்கள் அவ்வப்போது கவனிக்கப்பட்டு, அதற்குத் தகுந்த உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, பல்வேறு இலாகாக்களிலே, அட்டெண்டர்களாகப் பணியாற்றும், அதாவது ஏழெட்டு ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியும் அவர்களை நிரந்தரமாக்காமல், வொர்க் சார்ஜ்ட் என்று அழைக்கப்படும் முறையிலே அன்றாட ஊதியம் கொடுக்கப்படும் முறையிலே பல ஆண்டுகள் இருந்து வருவது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படிப்பட்டவர்களுடைய விண்ணப்பங்கள் கவனிக்கப்பட்டு, அவர்களை நிரந்தரம் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அட்டெண்டர்களாகவும், பியூன்களாகவும் வேலை செய்பவர்களை ஒர்க் சார்ஜ்ட் காடிகரியில் சேர்ப்பதில்லை. மாதச் சம்பளத்தில்தான் எடுக்கப்படுகிறார்கள். இந்த காடிகரிக்கு நாள் சம்பளமோ வாரச் சம்பளமோ கிடையாது.

Doctors for rural areas

*2154. *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராமப் புறங்களில் டாக்டர்கள் கட்டாய சேவை செய்யவேண்டுமென்று மத்திய சர்க்கார் கொண்டுவரும் சட்டத்தைக் குறித்து மாநில சர்க்காரின் ஆலோசனையைக் கேட்டார்களா?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) No.

(இ) Does not arise.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதம மந்திரியாக விளங்கும் ஜவஹர்லால் நேரு, மத்திய சர்க்காரிலே கிராமப்புறங்களிலே டாக்டர்கள் கட்டாயமாக சேவை செய்யவேண்டுமென்று சட்டம் கொண்டு வரப்போகிறோம் என்று சொன்னார்களே, அதைக் குறித்து இந்தச் சர்க்கார் என்ன முடிவெடுத்திருக்கிறார்கள்? அதேபோல், இந்தச் சர்க்கார் இந்த மாநிலத்தில் அரைகுறை வைத்திய படிப்பு முறையைப் புகுத்த வேண்டுமென்று இருந்தார்களே, அதற்குக்கூட மத்திய சர்க்கார் அல்லவா

DEPUTY SPEAKER : The hon. Member should put a separate question.

[7th December 1961

District Medical Officers (bifurcation of jurisdiction)

*2155 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : **கனம் ரெவின்யூ** அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

பெரிய ஜில்லாக்களை எப்படி இரண்டாகப் பிரித்து இரண்டு அதிகாரிகளை போடப்பட்டுள்ளதோ அதேபோல் டிஸ்டிரிக் மெடிகல் ஆபீஸர்களின் அதிகார எல்லையைப் பிரிக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : **No, Sir.**

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இப்போது சமீப காலத்திலே ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆஸ்பத்திரிகள், பிரைமரி ஹெல்த் சென்டர்கள் போன்ற பல ஆஸ்பத்திரிகள் அதிகப் படுகின்ற காரணத்தினால், டீ.எம்.ஓ-வாக இருக்கக்கூடிவர்களுக்கு வேலை அதிகமுள்ளது. ஆகவே, நிர்வாகத்திலும். இன்னும் சில விஷயங்களிலும் குறை ஏற்படுகிறது. இந்த நிலைமை இருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, இதை இனி மேலாவது இரண்டாகப் பிரித்து, இரண்டு டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபீசர்கள் பெரிய ஜில்லாக்களுக்குப் போட ஏற்பாடு செய்யப் படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்கு ஒரு யோசனை முன்பு இருந்தது. இன்னொரு சிவில் சர்ஜன் ஏற்படுத்தி, டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபீஸர் வேலையை இரண்டாகப் பிரிக்கலாம் என்று இருந்தது. அது இப்போது இன்னும் பரிசீலனையில் இருந்து வருகிறது. ஆகவே, இனிமேல்தான் இதை யெல்லாம் கவனிக்க வேண்டும்.

Loans for Harijans (Industries)

*2156 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லாவில் ஹரிஜனங்களுக்கு கைத் தொழில் அபிவிருத்திக்காக எவ்வளவு பணம் கடனாகக் கொடுக்கப் பட்டது ?

(இ) என்னென்ன தொழில்களுக்குத் தாலுக்கா வாரியாக ?

(உ) 1957 முதல் 1960 வரை எவ்வளவு வசூலிக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) (இ) (உ) Loans under the Madras State Aid to Industries Act, 1922, are granted without reference to the caste of the applicant-industrialists. Particulars of loans granted to Harijans alone are not, therefore available.

7th December 1961]

Sale of materials manufactured in jails

* 2157 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிறையில் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The articles manufactured in jails are already being sold to other jails and consuming departments of Government. The need for their sale in the open market is not felt as the quantity of the articles manufactured is just enough to meet the requirements of the Government institutions.

Bulldozers (hire charges)

* 2158 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1—10—1961 முதல் புல்டோஸர்களின் கட்டணத் தொகை உயர்த்தப்பட்டுள்ளதா ?

(இ) காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Yes, Sir.

(இ) The rate of hire charges in force prior to 1st October 1961 was approved in December 1954. Since then the price of machinery as well as the cost of maintenance have increased considerably. The scheme of hiring has, therefore, been working at a loss. In order to meet the increased maintenance charges and also to minimise the loss sustained in running the scheme, the rates of hire charges were increased with effect from 1st October 1961. Even the increased rates are much less than the actual working expenses.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இது போன்று கட்டணத்தை உயர்த்தியதன் காரணமாக ஏழை விவசாயிகள் இந்தக் கருவிகளை உயர்த்த முடியாத அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்—கஷ்டப்படுகிறார்கள்—என்பது கனம் அமைச்ருக்குத் தெரியுமா ? ஆகவே, ஏற்கெனவே இருந்த கட்டணத்தையே விதிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நான் முன்பு விளக்கியதுபோல நஷ்டம் அதிகமாக இருப்பதால் அதை ஓரளவுக்குக் குறைக்கவேண்டுமென்று கட்டணமானது அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. இது அதிகம் ஒன்றுமில்லை. 45 ரூபாய் வொர்க்கிங் எக்ஸ்பென்ஸெஸ் என்றால் 25 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 56 ரூபாய் வொர்க்கிங் எக்ஸ்பென்ஸெஸ் என்றால் 25 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இது ஒன்றும் அதிகம் என்று சொல்ல முடியாது. இதனால் பாதிக்கப்படுகிறார்கள் உபயோகிப்பவர்கள் என்று சொல்வது சரியல்ல.

[7th December 1961

SRI M. R. KANDASWAMY MUDALIYAR : புல்டோஸர்களை அரசாங்கம் வாடகைக்கு விடுவது மாதிரி மற்ற விவசாயக் கருவி களையும். . .

DEPUTY SPEAKER : The main question relates to bulldozers only and not to other agricultural implements. So, I pass on to the next question.

Inspection bungalow (Courtallam)

* 2159 *Q*.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Works be pleased to state the reason for giving priority in the allotment of rooms in Public Works Department Inspection Bungalow in Courtallam to Government servants and Presidents of District Boards and Panchayat Boards as against members of the Legislature?

THE HON. SRI P. KAKKAN : It is presumed that reference is made to the Tourist Bungalow at Courtallam. Pending the issue of rules for the occupation of the Tourist Bungalow, priority in the allotment of rooms in it is given in accordance with the general practice obtaining in the Circuit Houses maintained by the Public Works Department elsewhere in the State.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware of the fact that a notice is displayed in the Courtallam Inspection Bungalow that priority will be given to the presidents of panchayat boards over the members of the Legislature? If so, will the Government consider the question of giving priority to the members of the Legislature or at least consider them on a par with the presidents of panchayat boards?

THE HON. SRI P. KAKKAN : I shall examine the suggestion, Sir.

Thermal Station for Neiveli

DEPUTY SPEAKER : As the hon Member who gave notice of question No. 2160 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

* **2160 *Q*.—SRI M. P. SARATHI** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெய்வேலியில் "தெர்மல் ஸ்டேஷன்" ஒன்று அமைக்கும் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

(இ) அங்கிருந்து மின்சக்தி எப்போது உபயோகத்திற்குக் கிடைக்கும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) The construction of buildings for the thermal station is nearing completion; the major portion of the plant and machinery has been received at site. Erection is in progress.

7th December 1961]

(இ) The first 50 M.W. unit of the thermal plant is expected to be commissioned in December 1961, and the remaining units will be added on by stages. The power station is expected to work to full capacity by June 1963.

Divisional and Collector's offices

* 2161 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the public are experiencing considerable difficulties in obtaining particulars such as—

(i) prevailing market rate for paddy so as to enable the tenants to deposit amounts under The Cultivating Tenants Protection Act;

(ii) rights to properties (10-1 accounts) and assessment details; and

(iii) patta transfers, etc.

from the Divisional and Collectors' Offices; and

(*b*) whether the Government have any proposal to appoint Public Relations Officer in each of these offices to help the public in getting the required particulars and also in remitting money in treasuries?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) (i) Under the provisions of the Fair Rent Act and the rules made thereunder, the District Collector has to notify, in the months of January, April, July and October every year, in the District Gazette, in English and in the language or languages of the district, the average market price of the main crops of the district, during the immediately preceding three months, at each taluk headquarters. Copies of the notification published in the District Gazette have also to be kept in the offices of the Rent Court and Rent Tribunal. The cultivating tenants can, therefore, have no difficulty in the matter of fixing the cash value of the fair rent which they may want to deposit in Court.

(ii) and (iii) These particulars are available in the Taluk office, which is mainly concerned with them. It is not possible to make them available in the Divisional and Collectors' offices.

(*b*) No, Sir.

SRI M. S. SELVARAJAN : என்னுடைய கேள்வியில் (a) (ii) பகுதியிலுள்ள கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது இத்தகைய விவரங்கள் தாலுகா ஆபீஸில் கிடைக்கும் என்று பதில் தந்தார்கள். விவரங்கள் பெறுவதற்குரிய கஷ்டத்தைத்தான் நான் சுட்டிக்காட்டினேன். இந்த கஷ்டத்தைக் குறைக்க அதிகாரிகளுக்கும் ஜனங்களுக்கும் மத்தியில் ஒரு அதிகாரி இருந்து துணை செய்யவேண்டுமென்பதற்கு (b) பகுதியிலுள்ள கேள்வி கேட்டேன். ஆகையால் மீண்டும் அரசாங்கம் தாலுகா ஆபீஸ்களில் ஒரு தொடர்பு அதிகாரியை நியமிப்பதைப் பற்றி பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[7th December 1961

THE HON. SRI M. A. MANICKAVELU : இதிலே விலை விபரம் தெரியவேண்டும் என்றால் அதை நோட்டீஸ் போர்டில் போட்டால் போதும். இதற்கு அதிகாரிகள் என்ன செய்வது என்று தெரியவில்லை. சரியாக விளம்பரம் ஆகிறதா என்று கவனிக்கவேண்டும். விளம்பரம் இல்லையென்றால் அதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். இதற்காக தனியாக ஒரு அதிகாரி தேவையில்லை.

Manufacture of fireworks

* 2162. *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பட்டாசு, வாணம் முதலியன தமிழ்நாட்டில் எங்கெங்கு தயாரிக்கப்படுகின்றன ?

(இ) 1961-ல் எத்தனை பேருக்கு புதியதாக லைசென்ஸ் வழங்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) The principal centre for the manufacture of fireworks in this State is Sivakasi in Ramanathapuram district. Fireworks are also manufactured at several other centres including Kovilpatti and Palayamkottai in Tirunelveli district, and Kumbakonam in Thanjavur district.

(இ) During 1961 licences have been issued under the Industries (Development and Regulation) Act, for the establishment of four new fireworks factories in the State.

Vannankuzhi Odai Scheme

DEPUTY SPEAKER : As the hon. Member who gave notice of question No. 2163 is not in his seat, the question and answer will be printed in the Proceedings.

* 2163 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the stage at which the Vannankuzhi Odai Scheme in Udaiyarpalayam taluk, Jayankondan firka stands;

(*b*) whether the implementation of this scheme in any way depends on the Marudayar Scheme; and

(*c*) if so, how?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Chief Engineer (Irrigation) has sent an estimate amounting to Rs. 3·83 lakhs for the formation of a tank across Vannankuzhi Odai. The Government await the Board of Revenue's remarks on the proposals.

(*b*) The implementation of the above scheme is not dependent on the Marudayar Scheme.

(*c*) Does not arise.

7th December 1961]

UNSTARRED QUESTION.

Block Development

475 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது ராஜ்யத்தில் எந்தெந்த அசெம்பிளி தொகுதியில் பிளாக் டெவலப்மெண்ட் நடைபெறுகிறது ?

A.—A statement [a] showing the Development Blocks in operation in the various Assembly Constituencies, as on 1st October 1960 is furnished.

Industrial Training to Harijans

476 Q.—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் ஹரிஜனங்களுக்கு தொழிற்பயிற்சி அளிப்பதற்கான தொழிற்சாலைகள் அரசாங்கத்தாரால் எங்கெங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன ?

(இ) இத்தொழிற்சாலைகளிலே என்னென்ன தொழில்கள் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன ?

(உ) எத்தனை ஹிரிஜனங்களுக்கு தொழில் பயிற்சியளிக்கப்படுகிறது ?

A.—(அ) to (உ) No Industrial Training Centre for giving training exclusively to Schedule Castes was started during 1960–61. A schemed for imparting industrial training to 44 Scheduled Caste candidates in eleven departmental centres was implemented during the year.

Government Bus Service.

477 Q.—SRI M. P. SARATHY : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் சென்னைமாநகர், கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக எந்தெந்த மார்க்கங்களில் அரசாங்க பஸ் சர்வீசுகள் நடத்தப்படுகின்றன ?

(இ) எத்தனை வண்டிகள் ஓடுகின்றன ?

A.—(அ) and (இ) The particulars are furnished below :—

I. MADRAS BRANCH—SUBURBAN ROUTES.

Route number.	Destination.	Number of buses operated.
7B	Parrys—Villivakkam (via) Doveton	4
17B	Broadway—Mangadu (via) Thousand Lights ..	1
19	Broadway—Lattice Bridge (via) Adayar ..	4
19A	Broadway—Mahabalipuram (via) Tiruporur ..	2
20	Broadway—Villivakkam (via) Kellys ..	6
51	Broadway—Alandur (via) Thousand Lights ..	7
51A	Broadway—Padappai (via) Velacheri ..	2
51C	Broadway—St. Thomas Mount (via) Saidapet	1
56	Mint—Tiruvottiyur (via) Tondiarpet	12
56A	Mint—Ennore (via) Wimco	4
56B	Mint—Ponneri (via) Minjur	4
56C	High Court—Tiruvottiyur (via) Tondiarpet ..	2
57	Mint—Red Hills (via) Madavaram	4
58	Mint—Sholavaram (via) Red Hills	3

[a] Printed as Appendix V on pages 112–120 infra.

[7th December 1961

Route Number.	Destination.	Number of buses operated.
	I. Madras Branch—Suburban Routes—*cont.*	
61	Broadway—Avadi (via) Ambattur	2
62	Perambur—Ambattur	2
63	Broadway—Meppur	2
	District Routes.	
103	Madras—Tiruchirappalli (via) Villupuram ..	4 Express.
105	Madras—Salem (via) Kallakurichi	2 Express.
105A	Madras—Salem (Via) Tirukoilur	2 Express.
106	Madras—Kancheepuram (via) Sriperumbudur	1
108	Madras—Kancheepuram (via) Oragadam ..	1
109	Madras—Kancheepuram (via) Padappai ..	1
	Inter-State Routes.	
100	Madras—Bangalore (via) Hosur	1Express.
101	Madras—Tirupathi (via) Kalahasti	1
102	Madras—Tirupathi (via) Tiruttani	1
104	Madras—Tirupathi (via) Oothukottai ..	2
110	Madras—Venkatagiri (via) Sulurpet	1
107	Madras—Tirupathi (via) Sathyavedu	1
113	Madras—Thanjavur (via) Pondicherry ..	2 Express.
	II. Kanyakumari Branch—Inter-State Routes.	
51	Nagercoil—Trivandrum	10
51X	Nagercoil—Trivandrum (via) Monday Market ..	1 Express.
52X	Nagercoil—Cape Comorin	1 Express.
53	Colachel—Trivandrum (via) Azhagiamandapam	1
54	Colachel—Trivandrum (via) Thoduvetty ..	1
55	Thengapattanam—Trivandrum	1
56	Kollancode—Trivandrum (via) Parasolai ..	1
57	Pachiapara—Trivandrum	1
58	Thrupparappu—Trivandrum	1
	District Routes—Express Services.	
111	Nagercoil—Tiruchirappalli (via) Madurai ..	2
112	Nagercoil—Tiruchirappalli (via) Tuticorin ..	2
114	Nagercoil—Coimbatore (via) Madurai	2

Export of Food articles

478 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN: கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1959 முதல் இதுவரை நமது ராஜ்யத்திலிருந்து வெளிநாடுகளுக்கோ அல்லது வெளி ராஜ்யங்களுக்கோ கீழ்க்கண்ட பொருள்கள் எவ்வளவு ஏற்றுமதி செய்யப்பட்டன :—

1. மிளகாய் 2. புளி 3. சர்க்கரை 4. வெல்லம் 5. தவிடு 6. புண்ணாக்கு 7. எண்ணெய்.

7th December 1961]

A.—A statement is given below :—

STATEMENT.

(*a*) *Export to foreign countries by sea.*

Period.	*Chillies.* (CWTS.)	*Tamarind.* (CWTS.)	*Sugar.* (TONS.)	*Jaggery.* (TONS.)	*Wheat. bran.* (TONS.)	*Rice. bran.* (TONS.)	*Oil-cakes.* (TONS.)	*Vegetable Oil.* (TONS.)
1959	28,340	39,558	Nil.	36,869	4,456	558	14,254	11,542
1960—								
January ..	40	641	Nil.	Nil.	1,018	Nil.	2,767	177
February ..	3,388	96	Nil.	1,270	758	Nil.	296	2
March ..	9,204	280	Nil.	1,058	870	Nil.	3	31
April ..	9,539	600	Nil.	255	1,334	Nil.	102	79

(*b*) *Export to other States in India by sea.*

Period.	*Chillies.* (CWTS.)	*Sugar.* (TONS.)	*Jaggery.* (TONS.)	*Oilcakes.* (TONS.)	*Vegetable oils.* (TONS.)
1959	680	61	164	13	12,434
1960—					
January	Nil.	Nil.	Nil.	Nil.	1,807
February	73	Nil.	11	10	1,411
March	80	Nil.	6	1	527
April	Nil.	Nil.	Nil.	Nil.	1,542
May	52	Nil.	11	Nil.	2,316
June	141	Nil.	18	Nil.	1,849
July	47	Nil.	Nil.	Nil.	1,710
August	Nil.	Nil.	Nil.	Nil.	2,382
September	Nil.	Nil.	Nil.	Nil.	2,512
October	14	Nil.	27	6	3,121

(*c*) *Export to other States in India by rail.*

Period.	*Sugar.* (TONS).	*Jaggery.* (TONS).	*Oil-cakes* (TONS).	*Vegetable oils.* (TONS).
1959	8,161	32,070	17,455	1,56,028
1960—				
January	33	494	2,511	3,098
February	684	1,436	1,712	2,922
March	2,475	2,100	2,100	1,518

Statistics of exports of tamarind and bran to other States in India by sea and rail and of chillies by rail are not available, as these are not recorded separately in trade accounts.

Co-operative Farming Societies

479 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் எத்தனைக் கூட்டுறவு (1) Joint Farming, (2) Collective Farming, (3) Tenant Farming and (4) Land Colonisation சங்கங்கள் இருக்கின்றன ?

(இ) இவைகளுக்கு என்னென்ன உதவிகள் தரப்படுகின்றன ?

A.—(அ) and (இ) A statement[a] showing the particulars is placed on the table of the House.

[a] Printed as Appendix VI on pages 120–125 infra.

Chemical Fertilizers

480 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திற்கு 1960-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் இன்றுவரை வந்த ரசாயன உரம் எவ்வளவு ?

(இ) ஜில்லாவாரியாக ஒதுக்கியது எவ்வளவு ?

(உ) நமது ராஜ்யத்தின் 1960–61 வருடத்தேவை எவ்வளவு ?

(எ) புதிதாக எத்தனை உரத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் ? எங்கெங்கு ?

A.—(அ) to (எ) A statement * is placed on the table of the House.

Drinking-water well for Harijans (Usilampatti)

481 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலுக்கா, ஜி. உசிலம்பட்டி ஹரிஜனங்கள் குடிதண்ணீர் கிணறு ஆழப்படுத்த 1958-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ந்தேதி யன்று ஜில்லாக் கலெக்டரிடம் கொடுத்த மனு என்னவாயிற்று ?

A.—The Collector of Madurai has reported that the petition referred to by the Hon. Member was not received.

Drinking-water well for Harijans (Seepalakottai)

482 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் பொதுமராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலுக்கா, சீப்பாலகோட்டை ஹரிஜனங்கள் குடிதண்ணீர் வசதி கோரி 1958-ம் ஆண்டு ஜூலை மீ 12உ ஜில்லா கலெக்டரிடம் கொடுத்த மனு மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

A.—The Collector of Madurai has reported that the petition referred to by the Hon. Member was received in 1958 and action taken. He has stated that the nature of action taken on the petition could not be furnished at this distance of time as the papers in which action was taken on the petition have been destroyed due to efflux of time. He has, however, stated a new well was sunk in Seepalakottai, Periakulam taluk during 1957–58 at a cost of Rs. 2,060.

Drinking-water well for Harijans (Koduvilarpatti)

483 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலுக்கா, கொடுவிலார்ப்பட்டி கிராமம், மரியாப்பட்டி-பள்ளபட்டி ஹரிஜன மக்கள் குடிதண்ணீர் கிணறு வெட்ட கோரிக்கை மனு 1958-ம் ஆண்டு ஜூலை மீ 12உ கலெக்டரிடம் கொடுக்கப்பட்டதின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

A.—The Collector of Madurai has reported that the petition referred to by the Hon. Member was received in 1958 and action taken. He has stated that the nature of action taken on the petition could not be furnished at this distance of time as the papers in which action was taken on the petition have been destroyed due to efflux of time.

* Printed as Appendix VII on pages 125–126 infra.

7th December 1961]

Drinking-water facilities for Sukkangalpatti

484 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரைஜில்லா, பெரியகுளம்தாலுக்கா, சுக்காங்கல் பட்டி ஆதி திராவிடர்கள் குடிதண்ணீர் கிணறு ஆழப்படுத்தவும் சுற்றிச் சுவர் கட்டவும் 1958-ம் ௵ ஜூலைமீ 12உ ஜில்லா கலெக்டரிடம் கொடுத்த மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

A.—The Collector of Madurai has reported that the petition referred to by the Hon. Member was received in 1958 and action taken. He has stated that the nature of action taken on the petition could not be furnished at this distance of time as the papers in which action was taken on the petition have been destroyed due to efflux of time.

Drinking water-supply

485 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலுக்கா, சுக்காங்கல் பட்டி அருந்ததிய மக்கள் குடிதண்ணீர் வசதிக்கேட்டு 1958-ம் ௵ ஜூலைமீ 12உயில் ஜில்லா கலெக்டரிடம் கொடுத்த மனு என்ன நடவடிக்கையில் உள்ளது?

A.—The Collector of Madurai has reported that the petition referrerd to by the Hon. Member was received in 1958 and action taken. He has stated that the nature of action taken on the petition could not be furnished at this distance of time as the papers in which action was taken on the petition have been destroyed due to efflux of time.

Loans to Kurum Gounders

486 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலூகா, சீப்பாலக்கோட்டை குறும்பக் கவுண்டர்கள் குறும்பாடுகள் வாங்க கடன் கோரிய மனு 1958-ம் ௵ ஜூலைமீ 12-ந் தேதி ஜில்லாக் கலெக்டரிடம் கொடுத்ததின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

A.—The Collector of Madurai has reported that a batch of 43 petitions, dated 12th July 1958 presented by the Member was sent to the Revenue Divisional Officer, Usilampatti and other Officers concerned. As the connected files have been destroyed due to efflux of time it is not possible to ascertain the action taken on the petition in question. The Collector has reported that no loan has been granted to the Kurum Gownders.

Supply of Pedegree rams

487 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலூக்கா, சீப்பாலக்கோட்டை குறும்பக் கவுண்டர் பொது மக்கள் தங்கள் குலத்தொழிலான ஆடுவளர்த்தல் சம்பந்தமாய் 50 பொலிக்கிடா தேவை என 1958-ம் ௵ ஜூலைமீ 12-ந் தேதி ஜில்லா கலெக்டரிடம் கொடுத்த மனுவின்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

A.—The petition, dated 12th July 1958 has not been received in the Office of the Collector, Madurai.

[7th December 1961

Repairing of wells (Rangasamudram)

488 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலுக்கா, ரங்கசமுத்திரம் ஹரிஜனங்கள் குடிதண்ணீர் கிணறு சீர்படுத்த 1958-ம் ஆண்டு ஜூலை 12-ந் தேதி ஜில்லா கலெக்டரிம் கொடுத்த மனு என்னவாயிற்று ?

A.—The Collector of Madurai has reported that the petition referred to by the Hon. Member was not received.

Repairing of Kanmoi (Periakulam taluk)

489 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலூக்கா, சண்முகசுந்தரம் மேற்கே உள்ள ஊரணியைக் கால்நடைகள் தண்ணீர் குடிக்க மராமத்து செய்து தரக்கோரி 1958-ம் ஆண்டு ஜூலை 12-ந் தேதி ஜில்லா கலெக்டரிடம் கொடுத்த மனு என்னவாயிற்று ?

A.—It is reported that the petition referred to was not received.

Drinking water supply for Harijans

490 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலூக்கா திம்மரசநாயக்கனூர் ஹரிஜனங்கள் குடிதண்ணீர் கிணறு வெட்டித்தர வேண்டுமென 1958-ம் ஆண்டு ஜூலை 12-ந் தேதி ஜில்லா கலெக்டரிடம் கொடுத்த மனு என்னவாயிற்று?

A.—The Collector of Madurai has reported that the petition referred to by the Hon. Member was not received. He has, however, stated that a new well was sunk in Thimmarasanaickanur, Periakulam taluk during 1956–57 at a cost of Rs. 1,540.

Electricity supply to Vendinaickenpatti

491 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலுக்கா வெண்டிநாயக்கன்பட்டி பொது மக்கள் மின்சார இணைப்பு கோரி 1958-ம் ஆண்டு ஜூலை 12-ந் தேதி ஜில்லா கலெக்டரிடம் கொடுத்த மனு என்னவாயிற்று ?

A.—The petition in question has not been received in the office of the Collector of Madurai.

Well for Vendinaickanpatti

492 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலுக்கா, வெண்டிநாயக்கன்பட்டி ஹரிஜனங்கள் குடிதண்ணீர் வசதி கேட்டு 1958-ம் ஆண்டு ஜூலை 12-ந் தேதி ஜில்லா கலெக்டரிடம் கொடுத்த மனு என்னவாயிற்று ?

A.—The Collector of Madurai has reported that the petition referred to by the Hon. Member was received in 1958 and action taken. He has stated that the nature of action taken on the petition could not be furnished at this distance of time as the papers in which action was taken on the petition have been destroyed due to efflux of time.

7th December 1961]

Schools (Madurai district.)

493 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லாவில் கீழ்க்கண்ட ஊர் பொதுமக்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்காக ஜில்லா கலெக்டரிடம் கொடுத்த மனுக்கள் என்னவாயின ?

ஊர் பெயர்.	மனுவின் பொருள்.	மனு கொடுத்த தேதி.
	பெரியகுளம் தாலுகா.	
தென்பழனி	ஆரம்பப்பள்ளி ஆரம்பிக்க.	12—7—1958
சிவலிங்கநாயக்கன் பட்டி.	ஷை	25—11—1958
வீரசின்னம்மாள் புரம்.	ஷை	ஷை
துரைசாமிபுரம்	ஷை	ஷை
பெருமாள்பட்டி	பள்ளிக்கூடம் ஏற்படுத்த.	..
சொக்கலிங்கபுரம் (ஆவரம்பட்டி).	ஷை	..
சொக்கலிங்கபுரம்	ஷை	12—7—1958
சொக்கலிங்கபுரம்	ஷை	25—8—1958
வீரசின்னம்மாள் புரம்.	ஷை	ஷை
பாலக்கோம்பை	ஆரம்பப்பள்ளியை உயர்தர பள்ளியாக மாற்ற.	12—7—1958
வயல்பட்டி	உயர்தர ஆரம்பப்பள்ளி ஏற்படுத்த.	..
பாலக்கோம்பை	பாலக்கோம்பை பள்ளி பழுது பார்க்க சாங்ஷன் ஆன தொகை ரூ. 300 போதாது என்பதால் அதிக தொகை சாங்ஷன் செய்ய.	25—8—1958
கோட்டைப்பட்டி	பள்ளிக்கூடம் செப்பனிடவும், வாடகை கொடுக்கவும்.	25—11—1958
நாரணபுரம்	பள்ளிக்கூடத்திற்கு நூறு தகரங்கள் கொடுக்க.	ஷை
சக்கம்மாள்பட்டி	ஜில்லா போர்டு பள்ளிக்கு தளவாடங்கள், உபகரணங்கள் சப்ளை செய்ய.	12—7—1958
எழுமலை	பள்ளிக்கு வேண்டிய உபகரணங்கள் சப்ளை செய்ய மாணவர்கள் கோரிக்கை.	16—8—1959
நரசிங்கபுரம்	ஆலத்தளி மக்கள் பாடசாலையை ஜில்லா போர்டு ஏற்று நடத்த.	25—8—1958
சித்தார்பட்டி	பாடசாலைக்கு இடம் ஜாரி செய்து பள்ளிக்கூடம் கட்ட.	..
காமாக்ஷிபுரம்	பள்ளிக்கூடத்திற்கு தகடு (சிமின்ட்) போட.	25—11—1958
பூமலைக்குண்டு	பள்ளிக்கூட காம்பவுண்டு சுவர் கட்ட.	ஷை
அடைக்கன்பட்டி	ஓராசிரியர் பள்ளி ஏற்படுத்த.	..

A.—The representations, dated 12th July 1958 and 2 petitions, dated 25th August 1958, were received by the Collector and they were all transferred to the Revenue Divisional Officer for necessary action. The remaining petitions were not received by the Collector.

The following is the position as regards the provisions of educational facilities in the several places referred to in the question.

The question of opening schools at Thenpalani, Sivalinganayakanpatti, Veerachinnammalpuram, Perumalpatti and Adaikkanpatti is being considered by the Panchayat Union Commissioners. Elementary schools have been opened at Duraisamypuram, Chokkalingapuram and Narasingapuram (Alanthali). Theelementary school at Palakombai has been upgraded into a higher elementary school with effect from 1960–61 and the possibility of upgrading the one at Vayalpatti is being examined by the District Educational Officer.

Representations for effecting repairs to the school buildings at Palakombai and Kottaipatti and for the supply of equipment to the schools at Sakkammalpatti and Ezhumalai were not received either by the Special Officer, District Board, Madurai, or by the Block Development Officers. The school at Naranapuram is functioning in a thatched shed and there is no need to repair it now. The Panchayat Union Commissioner, Andipatti, is considering the question of constructing a building for the school at Sitharpatti. Repairs to the school building at Kamakshipuram have been carried out and a compound wall has been provided for the school at Poomalaikundu.

Harijan cheri (Bomminaickenpatti)

494 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலூகா, டி. பொம்மிநாயக்கன்பட்டி ஹரிஜன சேரி பக்கத்தில் மழை காலத்தில் ஓடும் ஓடைத் தண்ணீரை வேறு பக்கம் திருப்ப 1958-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் தேதியில் ஜில்லா கலெக்டரிடம் கொடுத்த மனு என்னவாயிற்று ?

முன்னால் உழுது கொண்டிருந்தவர்கள், நிலத்தை நம்பி இருந்தவர்கள் இவர்கள் சேர்ந்து ஒரு கூட்டுறவு சங்கம் அமைத்தால், அந்த சங்கத்திற்கு முக்கியத்துவம் தருவோம், அதற்குப்பிறகு உழுது கொண்டிருந்தவர்களுக்கு 'கல்டிவேடிங் டெனண்டுகளுக்கு' தருவோம் என்று சற்று விளக்கமாக சட்டத்தில் சொல்லப்பட்டால் நல்லது. இப்பொழுது சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறபடி பார்த்தால், நடைமுறையில் சங்கடம் ஏற்படலாம். புதியதாக 10 பேர்கள் சேர்ந்து ஒரு சொஸைடி ஏற்படுத்திக் கொண்டு முதலில் அந்த சங்கத்திற்கு சலுகை கொடுக்கவேண்டும் என்று கேட்டால், அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய நிலைமை சட்டத்தில் இருக்கிறது. அதை கவனித்து ஆவன செய்தால், மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

அதேபோன்று நிலத்தை பயிரிடுகிறவர்கள் இரண்டு முறை சரியாக சில விதிகளை அனுஷ்டித்து நடக்காவிட்டால் (consecutively for two seasons) அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றி விடலாம் என்றிருக்கிறது. இரண்டு முறை என்று போட்டால் சற்று கஷ்டமாக இருக்கும் என்று நினைக்கிறேன். இரண்டு முறை என்றிருப்பதை 4 முறை என்று உயர்த்தினால், உழுகிறவர்களுக்கு நலமாக இருக்கும். இரண்டு முறை என்றால் உழுகிறவர்களுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்படலாம். விவசாயிகளின் கஷ்டங்களை உணர்ந்து, இரண்டு முறையில் அவர்கள் தவறினால் உடனே அவர்களை வெளியேற்றிவிடாமல், 'கன்ஸிகியூடிவ் ஸீஸன்' என்று போட்டால் மிகவும் நலமாக இருக்கும். நான்கு முறையும் அவர்கள் தவறிவிட்டால், பிறகு அவர்களை உழுவதற்கு லாயக்கு இல்லை என்று வெளியேற்றுவதற்கு வாய்ப்பு இருக்கலாம். இந்த வகையிலே மாறுதல் செய்யப்பட்டால் போற்றத்தக்கதாக இருக்கும் என்று எண்ணுகிறேன். அதை கனம் அமைச்சர் அவர்கள் சற்று ஆராய்ந்து பார்த்து, அந்த வகையிலே சாதாரண விவசாயிகளுக்கு ஒரு நல்ல நிலைமையை ஏற்படுத்துவார்களென்று எதிர்பார்க்கிறேன்.

அப்புறம், அரசாங்கத்தின் கையிலே விதிவிலக்கு கொடுக்கும் அதிகாரம் இருக்கலாமா, இருக்கக்கூடாதா என்று பிரச்னை. இதற்கு ஒரு அங்கத்தினர் 'டிஸண்டிங் மினிட்' கொடுத்திருக்கிறார். அரசாங்கத்தின் கையிலே அதிகாரத்தை வைத்துக் கொண்டால் அதை அவர்கள் நல்ல முறையிலே உபயோகப்படுத்துவார்களோ, இல்லையோ என்ற ஒரு ஐயப்பாடு. அப்படி அதிகாரத்தை வைத்துக்கொள்ளுவது சரியா, இல்லையா என்பதை பார்க்கும்பொழுது, ஓரளவுக்கு வைத்துக்கொள்ளலாம் என்று நான் போடவேண்டியிருக்கிறது. காரணம், அவர்கள் நல்ல முறையில் நிர்வகிக்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய சிதம்பரசய்யர் அவர்கள் சொன்னது போல், தக்க முறையில் நிர்வகித்து அந்தச் சொத்தை பாதுகாத்து வருமானத்தை ஒழுங்கான வகையில் காட்டுகிறவர்களுக்கு இந்தமாதிரி ஒரு சட்டத்தினால் சங்கடம்

ஏற்படக்கூடாது, அவர்களுடைய நிலைமை இதனால் பாதிக்கப் படாமல் இருக்கவேண்டியது என்ற நல்லெண்ணத்துடன்தான் அரசாங்கம் அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டிருக்கிறது. அது மிகவும் போற்றத்தக்கதுதான். அதிகாரத்தை நல்ல முறையிலே நிர்வகித்தால் அந்தச் தொல்லைகளிலிருந்து விடுபட்டு, பல ஸ்தாபனங்கள் நல்ல முறையில் நிர்வாகத்தை தொடங்கலாம். ஆகையால்தான் அரசாங்கம் இந்த அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டிருக்கிறது.

(Sri N. S. Ramalingam in the Chair)

நல்லெண்ணத்தோடுதான் அரசாங்கம் இந்த அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கிறார்கள் என்பதை எதிர்க்கட்சிகள் உணர வேண்டும். தர்ம ஸ்தாபனங்கள் நல்ல முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும், அம்மாதிரி ஸ்தாபனங்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடுதான் விதிவிலக்கு கொடுப் பதற்கும், அதே சமயத்தில் விதிவிலக்கை ரத்து செய்வதற்கும் அரசாங்கம் அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டிருக் கிறார்கள். அந்த வகையில் அரசாங்கம் அதிகாரத்தை வைத்துக் கொண்டிருப்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். அது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

12-30 p.m. இதிலே சில விதிவிலக்குகள் கொடுத்திருக்கிறார்கள். தோப்பு, பழத் தோட்டங்கள், விறகுக்கு உபயோகப்படக்கூடிய மரங்கள் இருக்கும் நிலங்கள் இவைகளுக்கெல்லாம் விதிவிலக்கு அளிக்கப் படுகிறது. தனி நபர்களுக்கே விதிவிலக்குகள் கொடுக்கப்படும் போது, தர்மஸ்தாபனங்களுக்கு இம்மாதிரி நிலங்களுக்கு விதி விலக்குக் கொடுப்பதில் தவறு இல்லை. இதற்காகக்கூட ஒரு அங்கத்தினர் "டிஸ்ஸெண்டிங் மினிட்ஸ்" கொடுத்திருக்கிறார்கள். தனி நபருக்கே கொடுத்திருக்கும்போது, இந்த தர்மஸ்தாபனங் களுக்கு ஏன் கொடுக்கக்கூடாது என்று தெரியவில்லை. அப்படிக் கொடுப்பதில் தவறு இல்லை என்றுதான் சொல்ல முடியும். இதை உணர்ந்துதான் பொறுக்கு கமிட்டி இந்த மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அது வரவேற்கத் தக்கது.

இதே மசோதாவை, தர்ம ஸ்தாபனங்களின் நிலங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தில் கொண்டு வந்திருப்பதற்காக அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். அதே சமயத்தில், சிற்சில திருத்தங்களையும் மக்கள் விரும்பும் முறையில் கொண்டு வந்து சட்டத்தை நிறைவேற்றினால் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, இந்த மசோதாவை முழுமனதோடு ஆதரித்து, எதிர்க்கட்சிக்காரர்களும் வரவேற் பார்கள் என்ற நம்பிக்கையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஏனென்றால், யாருக்குமே தர்ம சொத்துக்கள் நல்ல முறையிலே பரிபாலிக்கப் படவேண்டும் என்ற அவா இருக்கும். அந்த அவா இம்மாதிரி சட்ட மூலமாக அமுலாக்கப்படவேண்டும் என்று விரும்புவார்கள் என்பதையும் எடுத்துச் சொல்லிக் கொண்டு என் வார்த்தைகளை முடிக்கிறேன்.

* **Sri A. GOVINDASAMY :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, சர்க்கார் நில உச்சவரம்பு மசோதாவை இந்த அவையில் கொண்டுவந்த நேரத்திலேயே, மடங்களுக்கும், கோவில்களுக்கும் உள்ள நிலங்களுக்கு 200 ஏக்கரா வரை விதிவிலக்கு கொடுப்பதை நாங்கள் எதிர்த்திருக்கிறோம். ஆனால் முதலில் அப்படி நிர்ணயிப்பது குறித்து அரசியல் சட்டம் குறுக்கே நிற்கிறது என்று சொல்லி எங்கள் கருத்துக்கள் தகர்த்தெறியப்பட்டது. இந்த நிலங்களைப் பராமரிப்பது குறித்து தனியாக ஒரு சட்டம் சீக்கிரத்திலேயே கொண்டுவருகிறோம் என்று அமைச்சர் வாக்குறுதி அளித்தார்கள் என்பதை எடுத்துக் காட்டி, அவ்விதமாகவே மிகவும் சீக்கிரமாகவே கொண்டுவந்தும் இருக்கிறார்கள் என்று சொல்லி ஆளும் கட்சி அங்கத்தினர் ஒருவர் பாராட்டிப் பேசினார்கள். ஆனால், எதிர்பார்த்த அளவுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறதா, பொறுக்குக் குழு செய்திருக்கிறதா என்று பார்த்தால், வந்திருக்கும் மசோதா மடங்களுக்கும், பொது ட்ரஸ்ட் ப்ராபர்ட்டி நிர்வகிப்பவர்களுக்கும் சாதகமாக அமைந்திருக்கிறதே அல்லாமல், எப்படிப் பார்த்தாலும், விவசாயிகளுக்கு, குத்தகைதாரர்களுக்கு, ஏழை எளிய குடியானவர்களுக்கு உண்மையிலேயே எந்தவிதத்திலும் பாதுகாப்பாக அமையவில்லை என்பதைத்தான் பார்க்கிறோம்.

மடங்களின் சொந்தக்காரர்களுக்குத்தான் சாதகமாக இருக்கிறது என்பதற்கு இந்த மசோதாவின் 5-வது பிரிவைப்பார்த்தாலே போதும். ஏற்கனவே 10 ஏக்கர் என்று இருந்தது இன்றைக்கு 20 ஏக்கர் என்ற அளவில் உயர்த்தப் பட்டிருக்கிறது. அப்படி 20 என்று உயர்த்தக்கூடாது என்று எங்கள் கட்சியைச் சேர்ந்த செல்வராஜ் அவர்கள் பொறுக்குக் குழுவிலேயே எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி ஆட்சேபனைக் குறிப்பும் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். 10 ஏக்கராக இருந்தால் போதும், அதுவே நன்மையாக இருக்கும் என்று அரசாங்கம் முதலிலேயே கொண்டு வந்தார்கள் என்று தான் நினைத்தோம். ஆனால், இவர்கள் செய்திருப்பது எப்படி இருக்கிறது என்றால், நாங்கள் கொண்டு வருவதுபோல் கொண்டுவருகிறோம், நீங்கள் ஆட்சேபியுங்கள், அதன் பிறகு மாற்றிவிடுகிறோம் என்ற அடிப்படையில் மடத்திற்கும் பொது ஸ்தாபனங்களுக்கும் சொன்னாற்போல் இருக்கிறது. அப்படி இல்லை என்றால், இப்பொழுதாவது, 10 என்பதை 20 என்று மாற்றி இருப்பதை திருத்தி திரும்பவும் 10 ஏக்கர்தான் என்று மாற்றி அமைத்தால்தான் விவசாயிகளுக்கு, பயிரிடும் குடியானவர்களுக்குச் சாதகமாக இருக்கும் என்ற எண்ணத்தில், அம்மாதிரி திருத்தத்தை சர்க்கார் திருத்தமாகவே கொண்டுவந்து மாற்றவேண்டும் என்று அமைச்சரவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

தர்மஸ்தாபனங்களில் உள்ள நிலங்களை பயிரிடும் குத்தகைக்காரர்கள் வருவாயை ஒரு மாதக் கெடுவில் கொடுக்காவிட்டால், அவர்களை வெளியேற்றலாம் என்று 19 (1) பிரிவில் போட்டிருக்கிறது. அது கடுமையானது, அதைத் தளர்த்த வேண்டும். அதைக் குறைந்த பட்சம் இரண்டு மாதம் என்றாவது செய்யவேண்டும்.

[Sri A. Govindasamy] [7th December 1961

இரண்டு மாதத் தவணையாவது கொடுக்கவேண்டும் என்று வலி யுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இரண்டு மாதம் என்று சொல் வதால எந்த மடத்திற்கும் ஆபத்து ஏற்பட்டு விடாது.

அடுத்தபடியாக, 24 (2)-வது பிரிவில், விவசாயத்திற்கு மின் சாரம் உபயோகப்படுத்தப்பட்டால், அவர்களின் குத்தகை 40 பர்செண்டு என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. மின்சாரக் கட்டணம் கட்டவேண்டிய பொறுப்பும், அதைப் பராமரிக்கும் பொறுப்பும் அவர்களுக்கு இருந்தாலும், இந்த குத்தகையை 40 என்பதிலிருந்து, 25 என்று மாற்றவேண்டும். அப்படி செய்தால் தான், உண்மையிலேயே சர்க்கார் ஏழைக் குடியானவர்களுக்கு உதவி செய்ததாகும். இதையும் சர்க்காரே சர்க்கார் திருத்தமாகக் கொண்டுவந்து திருத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுஸ்தாபனங்களின் நிலங்களில், விறகுக்கு உபயோக மாகும் மரங்கள் வளரும் நிலங்கள் இருந்தால், அந்த நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஏற்கனவே, நில உச்சவரம்பு மசோதா வந்த காலத்தில் எப்படி ஒவ்வொன்றுக்கும் விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று அந்தப் பட்டியல் நீண்டுகொண்டே போயிற்றோ, அப்படியேதான் இப் பொழுதும், விதிவிலக்குகள் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த பிரிவுப்படி, பொது ஸ்தாபன நிர்வாகிகள், இப்படிப்பட்ட பல மரங்களை வைத்துவிட்டால், அந்த நிலங்களுக்கு விதிவிலக்குக் கிடைக்கும்; அதன் காரணமாக உற்பத்தியும் குறையும், பயிரிடும் குடியானவர்களும் வெளியேற்றப் படுவார்கள். ஆகவே, இம் மாதிரியான நிலங்களுக்கு விதிவிலக்கு அளிப்பது கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே ஒரே ஒரு உறுப்பினர்தானே ஆட்சேபணைக் குறிப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. எங்கள் கட்சிக்கு ஒரே ஒரு உறுப்பினருக்குத்தானே அந்தக் குழுவில் இடம் இருந்தது. இவர்கள் என்ன ஆட்சேபித்தால் என்ன, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதிலே அதிகமாக இருக்கிறார்கள், ஆகவே நமக்குச் சாதகமாக வேண்டிய மாற்றங்களைச் செய்து கொள்ளலாம் என்று இந்த மசோதாவைத் திருத்தி இருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை; முன்னேற்றகரமாக ஏதாவது திருத்தங்கள் செய்தால் தான் அது ஆச்சரியப்படவேண்டிய விஷயம். ஆகவே, எங்கள் ஆட்சேபணைகளைக் கேட்ட பிறகு, சர்க்காரே, சில திருத்தங்களைக் கொண்டுவந்து இந்த மசோதாவை நல்ல முறையில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

SRI S. M. ANNAMALAI : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இப்பொழுது செலக்ட் கமிட்டியிலிருந்து வந்திருக்கும் தர்ம ஸ்தாபன சொத்துக்கள் சம்மந்தப்பட்ட மசோதாவின் பேரில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த சட்ட மன்றத் தின் முன்னால், நில உச்ச வரம்பு மசோதா கொண்டுவந்த காலத்தில் சர்க்கார் கொண்டிருந்த கொள்கை வேறு, இப்பொழுது

7th December 1961] [Sri S. M. Annamalai]

இந்த மசோதாவில் சொல்லியிருக்கும் கொள்கையே வேறு. அன்றைக்கு, சமுதாயத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்வைச் சரிக்கட்ட என்று சொல்லப்பட்டது. இன்றைக்கு இந்த மசோதாவில் சொல்லி இருப்பது என்ன? அன்றைக்கு தர்மஸ்தாபனங்களுக்கு உச்சவரம்ப கட்டுவது சம்மந்தமாக அரசியல் சட்டம் இடம் கொடுக்கவில்லை என்றும், இதற்காகத் தனிச்சட்டம் கொண்டு வருகிறோம் என்றும் அப்பொழுது சொன்னார்கள். இன்றைக்கு இந்த மசோதாவைக் கொண்டுவரும்போது என்ன சொல்கிறார்கள்? இப்பொழுது இதில் இருக்கும் "ப்ரீ ஆம்பிளை" பார்த்தால் உணவு உற்பத்தியை பெருக்க இந்த மசோதாவைக் கொண்டுவருகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது நில உச்ச வரம்பு மசோதா வந்த காலத்தில் சொன்னது, சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்க என்று. அன்றைக்கு தர்மஸ்தாபனங்களுக்கு உச்ச வரம்பு நிர்ணயித்து தஸ்திக் அலவன்ஸ் என்று கொடுக்கலாம் என்றும், அவைகள் நல்ல முறையிலே நடத்த உதவிசெய்யலாம் என்றும் சொன்னார்கள். இப்பொழுது அதுகூட இல்லை. சர்க்கார் இன்றைக்கு அந்த நிலங்களைக்கொண்டு, கூட்டுறவு பண்ணைகள் மூலமாக, நிர்வகிக்கலாம், இதனால் தர்மஸ்தாபனங்களுக்கு அதிக வருவாய் வரும் என்ற எண்ணத்தில் செய்யப்படுகிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட தர்மஸ்தாபன சொத்துக்களை குத்தகை மூலம் எடுத்து சர்க்காரே கூட்டுறவுப் பண்ணைகளை நடத்துவார்களேயானால் அதனால் நஷ்டம்தான் ஏற்படும். சர்க்காருக்கு கிடைத்திருக்கக்கூடிய புள்ளி விவரங்களிலிருந்து இந்தமாதிரி கூட்டுறவு பண்ணைகள் நல்ல முறையில் நடக்கிறதா அல்லது அதனால் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சரவர்கள் நன்கு சிந்தித்துப் பார்த்தால் தெரிய வரும். நாமே பிரத்யட்சமாகப் பார்த்திருக்கிறோம். விதை உற்பத்திக்காக சர்க்கார் சில நிலங்களை குத்தகைக்கு எடுத்து பல பண்ணைகள் அமைத்துக்கொண்டார்கள். அந்தமாதிரி பண்ணைகளுடைய வரவுசெலவு கணக்கைப் பார்த்தால் நஷ்டம்தான் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது என்பதை சர்க்காரே ஓரளவுக்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த தர்ம ஸ்தாபன சொத்துக்களையும் குத்தகை மூலமாக எடுத்து அதன் பிறகு கூட்டுறவுப் பண்ணைகளை சர்க்காரே அமைக்குமானால் நஷ்டம்தான் ஏற்படும். இந்த தர்ம ஸ்தாபன சொத்துக்களுக்கு உச்ச வரம்ப வைப்பதற்கு அரசியல் சட்டத்திலே இடமில்லை என்றால், மத்திய சர்க்காரை வற்புறுத்தி இந்த அரசியல் அமைப்பச் சட்டத்தை திருத்த வேண்டுமென்று சொல்லி, அதன் பிறகு இந்த தர்ம ஸ்தாபனங்களுக்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கலாம். அப்படி உச்ச வரம்பை நிர்ணயித்தால்தான் இந்த சபை முன்பு வந்த நில உச்ச வரம்பு மசோதாவில் என்ன கொள்கை சொல்லப்பட்டிருக்கிறதோ அந்தக் கொள்கை இந்த மசோதாவின் மூலமாக நிறைவேற்றப்படும். தர்ம ஸ்தாபனங்கள் நல்ல

முறையில் நடைபெற வேண்டுமென்று சர்க்கார் கருதுவார்களேயானல், ஏற்கனவே நில உச்ச வரம்பு மசோதாவில் சொல்லியது போல, ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு செலவாகும் என்று கணக்கிட்டு, அந்த அடிப்படையிலே தஸ்திக் அலவன்ஸ் கொடுத்து விடலாம். இந்த மசோதாவானது பொறுக்குக் கமிட்டிக்கு போவதற்கு முன்னல் ஒரு விதமாக அமைந்திருந்தது. பொறுக்குக் கமிட்டிக்கு சென்று வந்த பிறகு வேறு விதமாக மாற்றப்பட்டிருக்கிறது. முதலிலே சொந்த சாகுபடிக்கு பத்து ஸ்டாண்டர்ட் ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருந்தது. இந்த மசோதாவிலே இருபது ஸ்டாண்டர்ட் ஏக்கராக மாற்றப்பட்டிருக்கிறது. அதைப் போலத்தான் ஒரு குடியானவன் குத்தகையை கொடுக்காமல் மகசூலே அறுத்துக்கொண்டு சென்றுவிட்டால் அவனை நிலத்திலிருந்து வெளியேற்றலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இது மிகவும் வருந்தக்கூடிய விஷயம். இப்பொழுது கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட், பேர் ரெண்ட் ஆக்ட் முதலிய சட்டங்கள் இருக்கின்றன. விளைச்சல் வந்தபிறகு நிலச்சுவான்தார்களுக்கும் குத்தகை சாகுபடியாளருக்கும் தகராறு ஏற்படலாம். அதன் காரணமாக குத்தகை சாகுபடியாளர் "நான் இப்பொழுது அறுவடை செய்யப்போகிறேன்" என்று சொன்னல் நிலச்சுவான்தாரர் ஒப்புக்கொள்ள மாட்டார். ரெஜிஸ்டர்ட் நோட்டீஸ் கொடுத்தாலும்கூட வாங்கி வைத்துக்கொண்டு பேசாமல் இருந்து விடுவார். ஒரு வாரத்திற்குள் அறுவடை செய்தால்தான் மகசூல் நல்ல முறையில் இருக்கும். கால தாமதம் செய்து அறுவடை செய்தால் நெல் அனைத்தும் உதிர்ந்து விடும். அந்த நிலைமையில் இந்த தர்ம ஸ்தாபனத்திற்கு நோட்டீஸ் கொடுத்து, அவர்கள் அதை ஒப்புக்கொள்ளவில்லையென்றல் அதற்குப் பிறகு குத்தகை சாகுபடியாளர் தகுந்த ஆபீஸருக்கு நோட்டீஸ் கொடுத்து, அவர் வந்து அறுவடை செய்து மகசூலே பங்கிட்டு தரவேண்டுமென்று சொன்னல், இப்பொழுது பேர் ரெண்ட் ஆக்டில் என்ன விதமான கஷ்டங்கள் இருக்கின்றனவோ அதைவிட பல மடங்கு அதிகமாக கஷ்டங்கள் ஏற்படும். இவ்வாறு முதலில் தர்ம ஸ்தாபனத்திற்கு நோட்டீஸ் கொடுத்து அதன் பிறகு ஆதரைஸ்டு ஆபீஸருக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்று சொன்னல், கிட்டத்தட்ட ஒன்று அல்லது 1½ மாதம் ஆகிவிடும். அப்படி 1½ மாதம் கழித்து அறுவடை செய்தால் உண்மையிலேயே அந்த மகசூல் பயிரிடுகிறவன் கைக்கு வந்து சேருமா என்பதைப் பார்க்கவேண்டும். பேர் ரெண்ட் ஆக்டிலே உள்ள வேதனை கொடுக்கக்கூடிய பிரிவுகள் இந்த மசோதாவிலும் இருக்கின்றன. இந்த நிலைமையிலே நிலச் சொந்தக்காரர்களுக்கும் குத்தகை சாகுபடியாளருக்கும் ஏதாவது தகராறு இருக்குமேயானல் அதனல் குத்தகை சாகுபடியாளர் தான் அதிகமாக பாதகம் அடைவான். அதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பிரிவுகளை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும் பொழுது பல திருத்தங்கள் வரும். அந்தத் திருத்தங்களை கனம். அமைச்சரவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்

கொள்ளுகிறேன். குறிப்பாக கிளாஸ் 19, கிளாஸ் 20 இவைகளை எடுத்துவிட்டால்கூட நன்றாக இருக்கும். அப்படி தர்ம ஸ்தாபனத்திற்கும், குத்தகை சாகுபடியாளருக்கும் ஏதாவது தகராறு இருந்தால் மணியக்காரிடத்தில் ஒப்படைத்து அதன் பிறகு ஆதரைஸ்டு ஆபீஸருக்கு தெரிவித்து அவர் பங்கிட்டுத் தரலாம் என்று செய்யலாம்.

அடுத்தபடியாக, பம்பு செட்டு வைத்து பயிர் செய்பவர்களுக்கு 60 : 40 என்று சொல்லப்பட்டிருக்கிறது. எந்த கணக்கை வைத்துக் கொண்டு பொறுக்குக் கமிட்டி இந்த முடிவுக்கு வந்தது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எனக்கு முன்னால் பேசிய கனம் செல்வராஜ் அவர்கள் இந்த விகிதத்தை 75 : 25 ஆக மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். பம்பு செட்டு அல்லாமல், ஏரித்தண்ணீரைக்கொண்டு பயிர் செய்யும்பொழுது 60 : 40 என்றால், பம்பு செட்டு வைத்து பயிர் செய்து, அதற்குண்டான கரண்டு சார்ஜையும் யார் பயிரிடுகிறானோ அவனே கட்ட வேண்டுமென்று சொல்லிவிட்டு அப்படியிருந்தும் 60 : 40 தான் என்று சொன்னால், அது மிகவும் அநீதி விளைவிப்பதாக இருக்கும். இப்பொழுது பிளானிங் கமிஷனே ஏற்கனவே உள்ள 60 : 40 விகிதத்தை 75 : 25 ஆக உயர்த்த வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆற்றுத் தண்ணீர், ஏரித்தண்ணீர் பாசனத்திற்கு விகிதத்தை 75 : 25 ஆக மாற்ற வேண்டுமென்று பிளானிங் கமிஷன் சொல்லும்பொழுது, பம்பு செட்டு வைத்து பயிர் செய்தால் 60 : 40 தான் என்ற முடிவுக்கு எப்படி பொறுக்கு கமிட்டி வந்தது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதை அமைச்சரவர்கள் தீவிரமாக பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். யார் பயிரிடுகிறானோ அவன்தான் கரண்டு செலவை செலுத்துகிறான். ஆகவே அதை கழித்தாவது 60 : 40 என்று சொல்லியிருந்தால் பரவாயில்லை. பிரிவு பிரிவாக இந்த மசோதாவை எடுத்துக் கொள்கிறபொழுது நான் சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். அசல் மசோதாவைவிட இது குத்தகை சாகுபடியாளருக்கு மிகவும் பாதகமான முறையிலே அமைந்திருக்கிறது.

அதைப் போலவேதான் ஏராளமான விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. விறகு கட்டைக்காக இருக்கும் மரங்களுக்குக்கூட விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் நினைத்தால் விதிவிலக்கு கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அசல் மசோதாவில் இருந்ததைவிட அதிகமான விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே பிரிவு பிரிவாக விவாதத்திற்கு இந்த மசோதா வரும்பொழுது அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : தலைவர் அவர்களே, ஏற்கெனவே அசல் மசோதா வந்த நேரத்திலே இந்த கோவில், மட நிலங்களுக்கு உச்ச வரம்பு கட்டக்கூடிய பிரச்னையும் அதிலே

சேர்ந்து வந்தது. ஆனால் அற நிலையங்களுக்கு ஆதரவாக இருக்கக் கூடியவர்கள் அரசியல் சட்டத்திலே அதற்கு இடமில்லையென்றும், அசல் மசோதாவில் இருந்தபடியே நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், அது சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனால் சட்டம் அடிபட்டு விடும் என்று சொன்னதின் காரணமாக இந்த மசோதா தனியாக இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஒரு முறை கொண்டு வந்த மசோதாவை பரிசிலனை செயது, அந்தப் பரிசீலனையின் அடிப்படையில் மறுபடியும் கொண்டுவந்து அப்படி கொண்டு வந்ததை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி, இப்பொழுது இந்த சபை முன்பு வந்திருக்கிறது என்று சொன்னால் கோவில், மடங்களின் ஆதாரவாளர்கள் எந்த அளவுக்கு வேலை செய்கிறார்கள் என்பதை நினைக்கும்பொழுது உண்மையிலேயே பரிதவிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதற்காக கோவில்களையோ அல்லது மடங்களையோ எடுத்துவிட வேண்டுமென்று நான் சொல்ல வில்லை. இன்றைக்கு கோவில்களுக்கும் மடங்களுக்கும் சொந்த மாக லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே நாம் சொந்தமாக வைத்துக்கொண்டிருக்கக்கூடிய நிலங்களுக்கு உச்ச வரம்பு கட்டி இருக்கிறோம். அப்படி சொல்லக் கூடிய நேரத்தில் முதலில் பத்து ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வந்தது. இரண்டாவது முறையாக வந்தபோது அதை மறுபடியும் மாற்றி அமைத்து இருபது ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்ற அளவுக்கு திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் கூறப்படும் காரணங்கள் விசித்திரமாக இருக்கின்றன. சாமியை தூக்கு வதற்கு இப்பொழுது ஆள் கிடையாது. சாமி தூக்குவதற்கு பணமாக வேண்டாம் தானியமாகக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. நைவேத்தியத்திற்கு பணம் வேண்டாம், தானியமாகவும் அரிசியாகவும் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அந்த நிலைமையில் பத்து ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வந்திருக்கிறது. தானியங்கள் வேண்டும் என்று கேட்பதால்தான் பத்து ஏக்கர் என்பது இருபது ஏக்கராக வந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இந்தக் காரணத்தைக் கேட்டால் ரொம்பவும் விசித்திரமாகத்தான் இருக்கிறது. இன்றைக்கு மற்றவர்களுக்கு வரக்கூடிய வருவாய் அவர்களுக்கும் வரவேண்டும் என்று நினைக்கிறார்கள். இன்றைக்கு மற்ற நிலங்களையெல்லாம் குத்தகைக்கு விடும்போது எந்த அளவிற்கு வருவாய் வருமோ அந்த அளவுக்கு இங்கேயும் வரக் கூடிய அளவில் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. அந்த முறையில் இன்றைக்கு பெரிய அளவில் வருவாய் வரக்கூடிய அளவில் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அது போதாமல் சில விதிவிலக்குகள் வேறு கொடுக்கப்பட்டிருக்கிறது. விறகு வளர்ப் பதற்கும் நிலங்கள் வைத்துக்கொள்ளவேண்டும் என்று விதி விலக்கு வேறு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலைமையில் பல மரங்களை நடுவதற்கு வசதி ஏற்படுவதற்கு இடம் ஏற்படும். விறகுக்கு வேண்டிய மரங்களை உற்பத்தி செய்கிறோம் என்ற காரணத்தைக் காட்டி நிலங்களை மாற்றி அமைக்கக்கூடிய நிலைமை

ஏற்படலாம். ஆகவே இப்படியெல்லாம் விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டு விவசாயம் செய்யக்கூடிய நிலங்களில் விறகு மரங்களை வளர்க்கிறோம் என்று சொல்லக்கூடிய அளவில் அதை மாற்றி அமைப்பதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது கூடாது.

இதில் ட்ரஸ்ட்டுக்கு இருபது ஏக்கர் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த மசோதா வருவதற்கு முன்னால் பல லெட்டர்கள் எழுதினேன். அதாவது 1950-லிருந்து 1960 வரையில் எத்தனை ட்ரஸ்டிகள் இருக்கிறார்கள், எந்தெந்த வருஷத்தில் எந்தெந்த ட்ரஸ்டிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கேட்டு லெட்டர் எழுதினேன். குறிப்பிட்ட ட்ரஸ்டிகளுக்கு எவ்வளவு சொந்த நிலம் இருக்கிறது என்றெல்லாம் கேட்டு எழுதியிருந்தேன். எதற்காக கேட்டேன் என்றால் 1955-ம் வருஷத்திலிருந்து நாம் நிலச் சீர்திருத்தம் கொண்டு வரப்போகிறோம் என்று பிரசாரம் செய்துகொண்டு வருகிறோம். 1955-லிருந்து 1960-க்குள் இந்த ஐந்து வருஷங்களில் பினாமி மாற்றங்கள் எந்த அளவில் நடைபெற்றிருக்கின்றன என்பதைக் கண்டு பிடிப்பதற்குத்தான் அப்படி நான் எழுதிக் கேட்டிருந்தேன். 1955 முதற்கொண்டு 1960-க்குள் ஒவ்வொரு வருஷத்தில் எவ்வளவோ ட்ரஸ்டிகளை நியமித்திருக்கிறார்கள். இப்படி பல ட்ரஸ்டிகள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்தந்த வருஷத்தில் எவ்வளவு ட்ரஸ்டிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்வதற்குத்தான் அதைக் கேட்டேன். அப்படி கேட்டு ஆறு மாதங்களாகியும் அதற்கு இன்று வரை பதில் கிடையாது. இவைகளை எல்லாம் நாம் பார்க்கும்போது ஏற்கெனவே நாம் நிறைவேற்றி இருக்கக்கூடிய நில உச்ச வரம்பு சட்டத்தில் எவ்வளவோ ஊழல் இருக்கிறது என்பது தெரியவரும். பினாமி மாற்றங்கள் ஏற்படுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை, அவகாசத்தைக் கொடுத்திருக்கிறோம். இது போன்ற பல குறைபாடுகளை எடுத்துக்காட்ட முடியும். இப்படி பல விதி விலக்குகளும், சந்தர்ப்பங்களும் கொடுக்கப்பட்டிருப்பதால் அதைப்பற்றி நாம் என்ன நினைக்க வேண்டியதாக இருக்கிறது? ஆகவேதான் ட்ரஸ்டிகளுக்கும் கோவில்களுக்கும் இவ்வளவு ஏக்கர் நிலம் என்று நிர்ணயம் செய்ய வேண்டியதுதான் நல்லது என்று தோன்றுகிறது. அப்படிச் செய்தால்தான் நலமாக இருக்கும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். ஆகவே இந்த இருபது ஏக்கரை இந்தக் காரணத்தைக்கொண்டு கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை. விவசாயிகளுக்கு எப்படி ஐந்து ஏக்கர் என்று வைத்திருக்கிறோமோ அதைப்போலவே இவர்களுக்கும் வைத்துக்கொள்ளலாம். அவர்களுக்கு வருமானம் வரவில்லை என்று சொன்னால் எந்த குறிப்பிட்ட காரியத்திற்கு அவர்களுக்கு அது கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதற்கு வேண்டிய வருமானம் வரவில்லை என்று சொன்னால் அதற்கு வேறு வழிகளில் செய்து கொள்ளலாம். அப்படி இல்லாமல் நிலத்தை அதிகமாகக்கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டியதில்லை என்று சொல்லிக்

கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே அவர்களுக்கு ஐந்து ஸ்டாண்டர்ட் ஏக்கர் இருந்தால் போதுமானது. மற்ற நிலங்களுக்கு நாம் நியாய வாரம் கொடுக்கவேண்டும் என்று சொல்லி இருப்பது போன்று இதற்கும் சொல்லவேண்டும். அதாவது பல வருஷங்களுக்கு முன்னால் போடப்பட்ட இந்த 40-60 சட்டம் அப்படியே இருக்கிறது. அதன் பிறகு விலைவாசிகள் எவ்வளவோ உயர்ந்திருக்கிறது. எல்லாச் செலவையும் அவர்களே ஏற்றுக் கொண்டும் அவர்களுக்கு 40-60 என்றுதான் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலைமை அப்படியே இருந்தால் விவசாயிகள் எந்தக் காலத்திலும் முன்னேற முடியாது. இந்த நிலைமை நீடித்துக்கொண்டிருந்தால் நாம் சொல்லிக்கொண்டு வருவதுபோல் கிராமத்தில் இருக்கக்கூடியவர்களுடைய வாழ்க்கைத்தரம் எப்பொழுது உயரப்போகிறது, அவர்களுடைய வருமானம் எப்பொழுது அதிகமாகப் போகிறது, அவர்கள் மற்ற மனிதர்களுடன் எப்படி எப்பொழுது சரிசமமாக வாழ முடியும் என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே அவர்களுடைய வாழ்க்கைத்தரம் ஓரளவு நியாயமான முறையில் முன்னேற்றமடைய வேண்டுமானால் அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டுமானால் இப்பொழுது இருக்கக்கூடிய 40-60 என்பதை குறைந்தபட்சம் 25-75 என்ற அடிப்படையிலாவது மாற்றி அமைக்க முன்வரவேண்டும். இப்பொழுதுள்ள நிலைமையில் அப்படி மாற்றி அமைத்தால் போதுமானது என்கிற அளவிற்கு என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதைப்போலவே இந்த மசோதாவில் வீட்டு மனைகளுக்கு விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பல கிராமங்களில் பல வருஷ காலமாக கோவில்கள், மடங்களுக்குச் சொந்தமான இடங்களில் பல ஹரிஜனங்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்க்கையை நடத்திக் கொண்டு வருகிறார்கள். இப்படி பல ஹரிஜனங்களும் பின்தங்கியவர்களும் இருக்கிறார்கள். இப்படி வீடுகள் கட்டிக் கொண்டிருக்கக் கூடியவர்களுக்கு அந்தந்த இடங்களை அவர்களுக்கே சொந்தமாக்கக்கூடிய அளவிற்கு செய்தால்தான் நலமாக இருக்கும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே பல கல்வி பாடசாலைகள் இருக்கின்றன. அவைகளை பல ட்ரஸ்டிகள் நடத்திக்கொண்டு வருகிறார்கள். அதற்கு விவசாய திட்டமிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவைகளுக்கு எல்லாம் பல ஏக்கர் நிலங்களை எழுதி வைத்திருக்கிறார்கள். அது விவசாயத்திற்கு குந்தமாக இருக்கிறது. நாம் இப்பொழுது தேசீய ஒருமைப்பாட்டைப்பற்றி பேசிக்கொண்டு மாநாடுகளைக் கூட்டிக்கொண்டு வருகிறோம். இந்த நிலைமையில் இப்படி பாடசாலைகளுக்கு நிலங்களை எழுதி வைத்து பாடசாலைகளை நடத்தி வருவது அதற்குக் குந்தகமாக இருக்கிறது. நாம் இப்பொழுது ஜாதி மதம் வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு வருகிறோம். இந்த பாடசாலைகளை வைத்துக்கொண்டிருந்தால் அவைகள் ஜாதி

7th December 1961] [Sri V. K. Kothandaraman]

மதத்தை வளர்க்கக்கூடியதாக இருக்கிறது. இங்கு மத அடிப்படையில் கல்வி போதிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதைப்பற்றி கனம் அமைச்சருக்கே நன்ருகத் தெரியும். நான் சொல்ல வேண்டியதில்லை, மத அடிப்படையில் பாடசாலைகள் நடப்பது நல்லதா இல்லையா என்பது. அதைப்போலவே எவ்வளவோ ஆஸ்பத்திரிகளும் மத அடிப்படையில் நடந்து வருகிறது. அதுவும் அமைச்சருக்கு நன்ருகத் தெரியும். ஆகவே இப்படி பாடசாலைகளையும் ஆஸ்பத்திரிகளையும் மத அடிப்படையில் நடத்த விடாமல் அந்தப் பணத்தைக் கொண்டு சர்க்காரே நடத்த முன் வரவேண்டும். அதுதான் நலமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் அமுலுக்கு வரக்கூடிய நேரத்தில் ஏற்கெனவே விவசாயம் செய்து கொண்டிருந்தவர்கள் அவர் நிலச் சொந்தக்காரருக்குக் கொடுக்கவேண்டிய பாக்கி இருந்தால் அதை ஒரு மாதத்திற்குள் கொடுக்கவில்லையென்ருல் அவரை நிலத்தை விட்டு வெளியேற்றலாம் என்று இருக்கிறது. அப்படி சுலபமாக வெளியேற்றுவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் 1-00 p.m. காலத்தில் கடன் வாங்காத விவசாயியே கிடையாது. ஏற்கெனவே ஒரு விவசாயி கடன் வாங்கி இருக்கலாம். இல்லை என்று சொல்லவில்லை. அதைத் தொடர்ந்து அவனை வெளியேற்ற வேண்டுமென்ற நிலை இருந்தால் அதனுல் பலர் பாதிக்கப்படுவார்கள். அதனுல் பல விவசாயிகள் பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதை நன்ருக சிந்திக்க வேண்டும். ஆகவே அப்படி ஒரு மாதத் தவணைக்குள் கட்ட முடியாத நிலையில் ஏழை, எளிய விவசாயிகள் இருந்தால், அவர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுத்து நீண்ட நாள் தவணைகளில் சர்க்கார் திரும்பிப் பெறும் வகையில், அந்த நிலத்திலிருந்து விவசாயிகள் அப்புறப்படுத்தப்படாத அளவுக்கு வகை செய்ய வேண்டும். அப்படியில்லாமல் அந்த விவசாயிகளையெல்லாம் வெளியேற்றுவதற்கு மடாதிபதிகளுக்கு ஆதரவு கொடுக்கக்கூடிய முறையில் இதுபோன்ற விதி இருப்பது சரியல்ல என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயம் செய்வதற்கு ஆள் கிடைக்கவில்லையென்ருல், உடனே மடாதிபதிகள் நிலத்தைச் சொந்தச் சாகுபடிக்கு எடுத்துக் கொள்வது என்ற முறை இருக்கிறது. விவசாயம் செய்ய ஆள் கிடைக்கவில்லை என்பதை எப்படித் தெரிந்துகொள்வது என்று நான் கேட்கிறேன். ஆகவே, குறைந்தபட்சம் ஒரு மாத காலம் வரைக்கும் வாரத்திற்கு ஒரு முறை, இரண்டு முறை எல்லாப் பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யவேண்டும். எந்த மடத்திற்கு எவ்வளவு நிலம் இருக்கிறது, எந்த நிலத்தில் விவசாயம் செய்ய ஆள் வேண்டும் என்பதைக் குறித்து விளம்பரம் செய்யவேண்டும். அப்படி விளம்பரம் செய்து ஒரு மாதத்திற்குப் பிறகும் ஆள் கிடைக்கவில்லையென்ருல், அந்த நிலத்தை சர்க்காரே எடுத்து, அதில் விவசாயத்தை நடத்தி, மடத்திற்குச் சேரவேண்டியதில் ஏதாவது கொடுப்பதில் ஆட்சேபணை இல்லை. அப்படிச் செய்யலாம் என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

ஒப்பந்த (அக்ரிமெண்ட்) மனு எழுதவேண்டும் என்று இருக்கிறது. ஒப்பந்தம் எழுதுவதில் ஜில்லாவுக்கு ஜில்லா, கிராமத்திற்கு கிராமம் வித்தியாசப்படுகிறது. வட்டிக்குக் கொடுக்கிறவர்கள், திமிர் வட்டிக்குக் கொடுக்கக்கூடியவர்கள், எத்தனையோ விதமான 'கண்டிஷன்கள்' போடுகிறார்கள். உலகத்திலே இல்லாத நிபந்தனைகளையெல்லாம் போட்டு ஒப்பந்தம் எழுதி வாங்கிவிடுவார்கள். அந்த நிலை நீடித்தால் விவசாயிகள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை தான் ஏற்படும் என்று நான் நினைக்கிறேன். ஆகவே, இதற்கென்று ஒரு குறிப்பிட்ட முறை (பாரம்) நிர்ணயித்து, அதன் படிதான் எழுதி வாங்கவேண்டுமென்றிருப்பது நலம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்களுக்கு கோவில்களையும், மடாதிபதிகளையும் பாதுகாப்பதற்குத் தீவிரமான ஆர்வம் உண்டு என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். கல்யாணம் ஆகாத மடாதிபதிகளுக்கே இவ்வளவு நல்ல வாழ்க்கை நடத்த வசதி வேண்டுமென்னும்போது, மனைவி மக்களோடு இருக்கும் பரம ஏழை விவசாயிகளுடைய வாழ்க்கைத்தரம் எந்த அளவு இருக்கவேண்டும் என்பதிலே பெரிய அளவுக்கு கனம் அமைச்சர் அவர்கள் ஆர்வம் காட்டவேண்டும் என்று நான் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப் பார்க்கும்போது, ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்ச வரம்பு இருந்தாலபோதும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வி சம்பந்தப்பட்ட வரையில், மத அடிப்படையிலே நடத்தப்படாமல், சர்க்காரே பள்ளிக்கூடங்களை எடுத்து நடத்தக்கூடிய நிலைமையை உண்டாக்கவேண்டும். இதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார் என்று நினைக்கிறேன். ஒரு மாதத்திற்குள் விவசாயிகள் பணம் கட்ட முடியாத நிலையில் இருந்தால், அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றாத அளவுக்கு அவர்களுக்கு உதவி புரியுமாறு சர்க்காரை நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் இந்த மசோதாவில் திருத்தம் செய்யவேண்டுமென்றும் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*SRI M.S. SELVARAJAN கனம் தலைவர் அவர்களே, விவாதத்தில் இருக்கக்கூடிய மசோதா அரசாங்கத் தரப்பில் கொடுக்கப்பட்ட வாக்குறுதியைக் காப்பாற்றும் முகமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. குறிப்பாக மிஷனரிகள் சில ஸ்தாபனங்களை நடத்தி வருகிறார்கள். பாடசாலை நிர்வகிப்பது, அனாதை விடுதிகள் நிர்வகிப்பது இவைகளுக்கான நிறுவனங்களில் இயல்பாகவே முழுச் சொத்தை அங்குள்ளவர்களே நேரடியான பராமரிப்பு செய்து வருகிறார்கள். ஒரு அனாதை விடுதி இருக்குமானால் அங்கிருக்கும் நூற்றுக்கணக்கான குழந்தைகள் முற்றிலும் சோம்பேரிகள் போல, யாருடைய உழைப்பிலோ சாப்பிட்டுக் கொண்டிருப்பது என்று மாத்திரம் இல்லாமல் சில ஸ்தாபனங்களில் அந்தக் குழந்தைகளுக்கெல்லாம் தகுந்த அளவிற்கு வேலை வாங்கி சாப்பாடு போடுகிறார்கள், கல்வி போதிக்கிறார்கள், தொழில் வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்கிறார்கள். அது போன்ற நிறுவனங்கள்கூட சிற்சில இடங்களில் இருக்கின்றன. நான்

அறிந்தமட்டில், திருச்செந்தூர் தாலூகாவில், அடைக்கலபுரம் என்ற ஊர் இருக்கிறது. அங்கே ஒரு பெரிய அனாதை இல்லமிருக்கிறது. ஏறத்தாழ ஆயிரம் அனாதைக் குழந்தைகள் அங்கே பராமரிக்கப்படுகிறார்கள்—கத்தோலிக்க மிஷனரியால். அத்தகைய ஸ்தாபனத்திற்கு கிட்டத்தட்ட நூறு ஏக்கர் நிலம் இருக்கிறது. சாதாரண தரிசு நிலமாக, சாதாரண புஞ்சை நிலமாக இருந்ததை முற்றிலும் விருத்தி செய்து நஞ்சையாக மாற்றியிருக்கிறார்கள். மற்றவர்களுடைய உதவியே இல்லாமல், தங்களை அண்டிப் பிழைக்கும் குழந்தைகளை அத்தகைய ஸ்தாபனங்களின் பராமரிப்புக்கு உபயோகித்துக்கொண்டு வருகிறார்கள். இதுபோன்று நல்ல ஸ்தாபனங்கள்கூட இந்த மசோதா சட்டமாவதன்மூலம், விதிவிலக்குக்கு உட்பட்டதாக இல்லாமல் போய்விடலாம். ஆகவே, இதுபோன்ற நிறுவனங்கள் வேறு இடங்களில் இருந்தாலும், எத்தகைய ஸ்தாபனம் அதை நிர்வகித்து வந்தாலும்கூட, அவைகளையெல்லாம்கூடப் பார்த்து, பரிசீலனை செய்து அவை முற்றிலும் முறையான வழியில் நடந்து வருகின்றன என்ற எண்ணத்திற்கு அரசாங்கம் வருமானால், அதுபோன்ற நிறுவனங்களுக்கு விதிவிலக்குக் கொடுக்கும் அதிகாரம் அரசாங்கத்திற்குத் தேவை. அவைகளேகூட இன்றைக்கிருக்கும் சட்டப் பிரகாரம், இருபது ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும்.

(Deputy Speaker in the chair)

எங்கேனும் ஒருவருக்கு கட்டுக் குத்தகைக்கு கொடுத்தாக வேண்டும் அவர்கள் தயாராக இல்லாவிட்டால் தயார் செய்து, அத்தகைய கட்டுக் குத்தகைக்காரரைக் கண்டு ஒப்படைக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்படுமானால், யாருக்குக் கொடுப்பது? இத்தகைய சிரமங்களுக்கு அவர்கள் உட்படுவார்கள். இதுபோன்று அவசியந்தானா என்ற நிலைமை ஏற்படும். ஆகவே, இன்றைக்கு இருக்கக்கூடிய விதிவிலக்கு அளிக்கக்கூடிய அதிகாரங்கள் செக்ஷன் 52 மூலமாக அரசாங்கம் எடுத்துக் கொள்வது போதுமானவயாக இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த மசோதா வருவதன் மூலமாக மத ஸ்தாபனங்கள், தரும ஸ்தாபனங்கள் எல்லாம் நிச்சயமாகப் பலன் அனுபவிக்கப்போகின்றன. மத ஸ்தாபனங்களினுடைய வளர்ச்சியை விரும்புகிறவர்கள், அத்தகைய ஸ்தாபனங்கள் நல்ல விதமாக வரவேண்டும், வளரவேண்டும் என்று எண்ணக்கூடிய எல்லோரும் சந்தோஷப்படவேண்டியது தான். இது மத ஸ்தாபனங்களை, மடாதிபதிகளைப் பாதிக்கும் என்று யாரும் கவலை கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், நான் அறிந்த மட்டில், சில தேவஸ்தானத்திற்குச் சொந்தமான பொது ட்ரஸ்ட்களைப் பராமரிப்பதே தேவஸ்தான நிர்வாகத்தினர் அல்லது ட்ரஸ்ட் பராமரிப்பாளர்களுக்கு முழு நேர வேலையாகி விடுகிறதே தவிர, எத்தகைய நோக்கத்தோடு இந்த நிறுவனங்களுக்கெல்லாம் தரும சொத்துக்கள் ஒப்படைக்கப்பட்டனவோ அத்தகைய நல்ல காரியங்கள்கூட நல்ல எண்ணம்கூட நிறைவேற முடியாத அளவு தடுமாடக்கூடிய • கஷ்டங்களுக்கு இவையெல்லாம் உட்பட்டு

விடுகின்றன. இதெல்லாம் இல்லாத அளவு சொற்ப அளவில் தங்களுடைய பொறுப்பை வைத்துக்கொள்ளக்கூடிய வகையில், ஒரு வரை யறைக்குள் 'மாக்ஸிமம் லிமிட்' அவசியம்தான். அதன் மூலமாக நிச்சயமான வருமானத்திற்கு அதிக ஸ்தாபனங்களுக்கு இடம் ஏற்பட்டுவிடுகிறது. குறிப்பாக, கூட்டுறவு முறையில் வளர்ச்சி பெறவேண்டும், கூட்டுறவு சங்கங்கள் எங்கெங்கே அமைக்க முடியுமோ அவைகளுக்கெல்லாம் அதிக ஊக்கம் கொடுக்க வேண்டும் என்பது இந்த மசோதாவின் மூலமாக நாம் தெரிந்து கொள்கிறோம். இது சட்டமாவதன் மூலமாக, பெரும்பாலன இடங்களில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் வளர்ச்சி அடைவதற்கும் இது ஏதுவாக இருக்கும். தரும ஸ்தாபனங்களுக்கும் தேவஸ்தானங்களுக்கும் நிச்சயமான ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வருமானம் நிலையாக வரும். அதைப் பராமரிக்கக்கூடிய சிரமங்கள் நிச்சயமாகக் குறையும். இந்த இரண்டுவித அனுகூலங்கள் நிச்சயமாக இருக்கின்றன. ஆகவே, தரும ஸ்தாபனங்களின்மீது மரியாதையும் மதிப்பும் வைத்திருக்கக்கூடியவர்களும் இதை வரவேற்க வேண்டுமே தவிர, எந்தவிதமான வருத்தமும் கொள்ளமாட்டார்கள்.

அதே நோக்கில் அனுதை விடுதிகளைப் போன்று சிறந்த முறையில் நடக்கும் நல்ல ஸ்தாபனங்களுக்கு, அவை எத்தகைய மிஷனரியாக இருந்தாலும் சரி, கிருத்துவ மிஷனரியாக இருந்தாலும் சரி மற்ற மதத்தினர்களுடைய மிஷனரியாக இருந்தாலும் சரி, அவர்கள் இன்றையதினம் ஏற்றுக்கொண்டிருக்கிற நல்ல பணிகளை எல்லாம் கவனித்து அவர்களுக்கு இந்த மசோதாவில் இருந்து விலக்கு அளிக்கத்தான் வேண்டும் என்று சர்க்கார் கருதினலும்கூட இப்போது முடியாது. இந்தச் சட்டத்தின் மூலம் அரசாங்கத்தின் கை கட்டப்படுகிறது. முறையாக நடக்கக்கூடிய அத்தகைய ஸ்தாபனங்களுக்கு அரசாங்கம் ஒருக்கால் விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று நினைத்தால் அதற்கு அனுசரணையான அதிகாரத்தை இந்தச் சட்டத்திலேயே கோரிப்பெறவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அதற்குரிய இடத்தில் அதற்குரிய அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **SRI V. K. RAMASWAMY MUDALIYAR**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைப்பற்றி நான் என்னுடைய அபிப்பிராயங்களைப் பொறுக்குக் கமிட்டியில் விவரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகவே இப்போது அதிகமாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. என்னைப் பொறுத்த வரையில் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். முக்கியமாகச் சாகுபடி செய்பவர்களை அப்புறப்படுத்தக்கூடாது. உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்ற நோக்கங்களை நான் ஒப்புக் கொள்கிறேன். தவிர தேவாலயங்கள் நல்லமுறையில் நடக்க வேண்டும். அப்படி இருக்கும்போது 20 ஏக்கர் சொந்த சாகுபடி என்றால் சிக்கனமாக இருக்காது. இன்றைய தினம் விதைப்

பண்ணைகளுக்கு 25 ஏக்கர், 50 ஏக்கர் என்று இருக்கவேண்டும் என்பதை விவசாய இலாகாவும், கலெக்டரும் தீர்மானம் செய்திருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது இந்த தேவாலயங்களுக்கு 20 ஏக்கர் என்று வைப்பது லாபகரமாக இருக்காது. நஷ்டம்தான் வரும். நானும் ஒரு விவசாயி என்ற முறையில் சொல்கிறேன். ஆகவே இதைக் கொஞ்சம் உயர்த்திக்கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சில கனம் அங்கத்தினர்கள் இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்துப் பேசினார்கள். வேறு சில கனம் அங்கத்தினர்கள் இதில் இருக்கிற குறைபாடுகளைத் தெரிவிக்கிறபோது முன்பு நாம் நிறைவேற்றியுள்ள உச்ச வரம்புச் சட்டம், இப்போது நாம் யோசிக்கின்ற இந்த மசோதா ஆகிய இந்த இரண்டின் அடிப்படைகளின் அவசியத்தை மனதில் கொள்ளாமல் குறைபாடுகளைத் தெரிவித்தார்கள் என்றுதான் சொல்லவேண்டும். முன்பு நிறைவேற்றப்பட்ட சட்டம் நிலம் சொந்தமாக வைத்துக் கொள்வதற்கு உச்ச வரம்பு நிர்ணயிப்பது. அதற்காக ஸ்டாண்டார்டு ஏக்கர் இவ்வளவு என்று வரம்பு கட்டினோம். கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள் இந்த மசோதாவை முதலில் நாம் தயாரித்த போது தர்ம ஸ்தாபனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு அதிக உச்ச வரம்பு போடுவது என்று போட்டோம். அதாவது 200 ஏக்கர் என்று போட்டோம். "அது அப்படியே இருக்கலாமே, விதிவிலக்குக் கொடுத்துவிட்டார்களே" என்று இப்போது சொல்கிறார்கள். இவ்வாறு கனம் அங்கத்தினர் தெரிவித்த அபிப்பிராயப்படி அந்த மசோதாவில் தர்மஸ்தாபனங்களுக்குச் சொந்தமான நிலத்தையும் சேர்த்து 200 ஏக்கர் என்று போட்டிருந்தால் 200 ஏக்கரா வரைக்கும் தர்மஸ்தாபனங்களுக்குச் சொந்தமாக இருக்கும். அதற்குமேல் மிச்சமாக இருக்கிற நிலங்களுக்கு நாம் நஷ்டஈடு கொடுக்கவேண்டும். நஷ்டஈடும் முன்பு இருந்த மசோதாவின்படி அதிகமாகும். ஏனென்றால் தர்மஸ்தாபனங்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் வருமானம் எந்தவகையிலும் குறையக்கூடாது என்பதே அந்த மசோதாவின் அடிப்படை. ஆகையால் தஸ்திக் அலவென்சு கொடுப்பது என்றுகூடப் பேசினார்கள். அப்படிக்கொடுப்பது என்றால் அந்த தர்மஸ்தாபனங்களில் இருந்து நமக்கு வருமானம் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் பொதுமக்கள் கட்டுகிற வரிப்பணத்தில் இருந்து அதைக் கொடுக்கும்படியாக நேரிட்டிருக்கும். ஆகவே அந்த மசோதாவைவிட இந்த மசோதா எந்தவகையில் மோசமாகப் போய்விட்டது என்றுதான் எனக்குப் புரியவில்லை.

இப்போது சொந்தமாக 20 ஏக்கரா வரையில் சாகுபடிக்கு வைத்துக் கொள்ளலாம் என்று செய்திருக்கிறோம். சாகுபடி செய்துகொண்டிருக்கிற யாரையோ நிலத்தைவிட்டு அப்புறப்

[Sri M. Bhaktavatsalam] [7th December 1961

படுத்திவிட்டு இதை எடுத்துக்கொள்ளப்போகிறார்கள் என்று இல்லை. அதைப்பற்றி கனம் சீனுவாச ஐயர் அவர்கள் சொன்னது சரி. இப்போது 500 ஏக்கரா, 200 ஏக்கரா என்று சொந்தச் சாகுபடியில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இனி 20 ஏக்கரா போக பாக்கியைக் குத்தகைக்கு 5 ஏக்கராவுக்கு மேல் போகாமல்விட வேண்டும். அவ்வளவு தான். 500 ஏக்கரா, 200 ஏக்கரா என்று சாகுபடி செய்துக்கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கையும்கூடக் குறைவு. அதுவும் சொந்தப்பண்ணை என்று வைத்துச் செய்வது குறைவு. அதுவும் 20 ஏக்கருக்கு மேல் வைத்திருக்கக்கூடியவர்களைப் பொறுத்துத்தான் இந்த மசோதா. ஆகவே நிலத்தைவிட்டு அப்புறப்படுத்துவது என்ற பிரச்சனை இதில் இல்லை. இரண்டாவது விதிவிலக்கைப்பற்றிச் சொன்னார்கள். அதுபற்றியும் ஒரு குழப்பம் சிலர் மனதில் இருப்பதாகத் தெரிகிறது. விதிவிலக்கு உச்ச வரம்புச் சட்டத்திற்குப் போட்டோம். நிலம் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்காகப் போட்டோம். இப்போது குத்தகைக்கு விடுவது பற்றித்தான் பிரச்சனை. இந்த மசோதா முன்பு இருந்ததைவிட எந்தவகையிலும் மோசமாகப் போகவில்லை. உச்ச வரம்பு மசோதாவில் ஹில் ஏரியா முழுவதற்கும் விலக்குக் கொடுத்திருக்கிறோம். இங்கே கொடுக்கவில்லை. அதில் கூட 5 ஏக்கராவுக்கு மேற்படாமல் குத்தகைக்கு விடலாம். உருளைக் கிழங்கு முதலியவற்றைப் பயிரிடலாம் காடுகள் என்றால்கூட அப்படிவிடலாம். மரமும் தான் நமக்கு வேண்டியிருக்கிறது. அதைப் போய் எப்படி குத்தகைக்கு விடுவது? குத்தகை விடுவது இந்த மசோதாவின் அடிப்படை. அதற்கு விதிவிலக்கு இதில் அளிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீமதி அனந்தநாயகி பேசுகிறபோது கூட்டுறவு சங்கம் எடுத்து நடத்துகிற 6-வது பிரிவைப்பற்றி பேசினார்கள். பத்து பேர் வந்து கூட்டுறவு சங்கம் வைத்து அதை எடுத்துக்கொள்வது என்றால் அப்புறப்படுத்தக்கூடாது என்று சொன்னார்கள், அப்புறப்படுத்தக்கூடாது என்ற சட்டம் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. பயிரிடுகிற எல்லா குத்தகைக்காரர்களுக்கும் அது பொருந்தும்.

இப்போது குத்தகைக்கு பயிரிடுகிறவர்கள் யாரையும் அப்புறப்படுத்த முடியாது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் இருந்தால் அன்றி, கூட்டுறவு சங்கம் வைக்க வேண்டும் அல்லது சொந்தமாக பயிரிடவேண்டுமென்று சொல்லி இருக்கிற டெனன்ட்ஸ்களை அப்புறப்படுத்த முடியாது. அதற்கு இடமில்லை. கூட்டுறவு சங்கம் வைத்துக் கொடுக்கலாம் அல்லது தனித்தனியாக கொடுக்கலாம் இருக்கும் நிலத்தை. கூட்டுறவு சங்கம் என்றாலேயே எதையோ பிரமாதமாக நினைத்துக்கொண்டு யார் பேரிலோ பகைக்கப் போகிறோம், அதனால் கெடுதல் வரப்போகிறதென்று சிலர் நினைக்கிறார்கள், எழுதுகிறார்கள். முதலில் பயம் ஏற்படுவதுண்டு, குழப்பம் ஏற்படுவதுண்டு. அதனால் இப்பொழுது கிராம மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். தர்மஸ்தாபனங்களுக்கு சொந்தமான நிலத்தை கூட்டுறவு முறையில் சாகுபடி செய்ய இடமளிக்கப்

பட்டிருக்கிறது. இப்பொழுது 75 "டெனன்ட்ஸ் பார்மிங் கோவாப்பரேட்டிவ் சொசைட்டீஸ்" இருக்கின்றன. முக்கியமாக, தஞ்சாவூர், திருநெல்வேலி இன்னும் சில இடங்களில் இருக்கின்றன. அங்கு, நல்ல முறையில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. முதலில் இது எதற்கு என்று நினைத்தவர்கள், இப்பொழுது திருப்தியடைந்திருக்கிறார்கள். இதனால் பயிரிடுகிறவர்களுக்கும் பயன் இருக்கிறது, வசதி யிருக்கிறது. ஒரு பத்திரிகை எழுதியது, கூட்டுறவு சங்கங்களுக்கு எதற்காக நீங்கள் வசதி செய்து கொடுக்க வேண்டும், ஏன் சப்ஸிடி கொடுக்க வேண்டுமென்று. விவசாயம் செய்கிறவர்களுக்கு வசதி செய்து கொடுக்கிறோம், சொந்த நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் வசதி செய்து கொடுக்கிறோம், லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் மூலதனம் போட்டு தொழில் நடத்துபவர்களுக்கும் வசதி செய்து கொடுக்கிறோம், அவர்களுக்கு மின்சாரம் குறைந்த கட்டணத்தில் கொடுக்கிறோம்—அவர்களுக்கும் வசதி செய்து கொடுக்கவில்லையா—ஆகவே கூட்டுறவு சங்கங்களை மட்டும் பெரிய எதிரிபோல் நினைப்பது விசித்திரமாகயிருக்கிறது. கூட்டுறவு என்றால் யார் பேரிலோ எதையோ பிடிவாதமாக அவர்கள் தலையில் சுமத்துவதாக சிலர் நினைக்கிறார்கள். அதில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்கு தெரியும் அதன் நன்மை. இதில் நிர்ப்பந்தம் எதுவுமில்லை. கூட்டுறவு சங்கம் உள்ள இடங்களில் விளைச்சல் அதிகமாகியிருக்கிறது. வசதி பெருகியிருக்கிறது. அரசாங்கத்தின் கருத்து விவசாயத்தைப் பெருக்கவேண்டுமென்பது. விளைச்சலை அதிகப்படுத்துவதுதான் முக்கியம் என்று சொன்னால் அக்கருத்தைக் கொண்டுதான் இப்பிரிவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை சிலயிடங்களில் 300, 400 ஏக்கர் என்று சாகுபடி செய்கிறார்கள். கனம் அங்கத்தினர் ஸ்ரீனுவாச ஐயர் அவர்கள் குறிப்பிட்டமாதிரி சிலயிடங்களில் லாபகரமாக நடக்கின்றன. அநேகயிடங்களில் லாபம் இல்லை. நஷ்டம்கூட வருகிறது. அதனால் தர்ம ஸ்தாபனங்களுக்குத்தான் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, பயிரிடுகிற விவசாயியும் பயன் அடைய வேண்டும், அதனால் தர்ம ஸ்தாபனங்களுக்கும் நஷ்டம் ஏற்படக்கூடாது. பயிரிடுகிறவர்களும் சுரண்டப்படக்கூடாது இவைகளை யொட்டித்தான் பிரிவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. முன்பிருந்ததுபோல் வரிப் பணத்திலிருந்து தஸ்திக் கொடுக்க வேண்டியதில்லை. பின்னர், விதிவிலக்கு பற்றி இங்கு பிரமாதமாக சொன்னார்கள். சொந்த சாகுபடி செய்வதற்கு விதி விலக்கு வேண்டியதன் நிமித்தம் இது போடப்பட்டிருக்கிறது. அதில் 10 ஏக்கரா, 20 ஏக்கரா என்ற பிரச்னை வந்தது. அவர்கள் இதற்காக வேண்டிய ஒரு எஸ்டாப்ளிஷ்மென்ட் வைத்திருப்பார்கள். ஆகவே நஷ்டம் வரக்கூடாது. எனவே, மொத்தத்தில் 20 ஏக்கர் இருந்தால் போதும். அதற்கு மேல் வேண்டியதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. குறைவாக உள்ளவர்கள் ஓரளவு பாதிக்கப்படுகிறார்கள். ஆக மொத்தத்தில் செலக்ட் கமிட்டி எல்லாவற்றையும் நன்கு

யோசித்துப் பார்த்து 20 ஏக்கர் என்று வைத்தால் எல்லோருக்கும் போதும் என்று நிர்மானிக்கப்பட்டது. ஏற்கனவே இருக்கிறவர்கள் பாதிக்கபடப் போவதில்லை. 200, 400 என்று வைத்திருந்தால் ஒரு ஆளுக்கு 5 ஏக்கர் என்று பிரித்துக் கொடுக்க முடியும். பின்னர், பேர் ரென்ட் பற்றி குறிப்பிட்டார்கள். இது இப்பொழுது அமுலில் இருக்கிறது. அதை மாற்றவில்லை. அதைக் குறைப்பது என்றால் அந்த அளவிற்கு தர்ம ஸ்தாபனங்களின் வருவாய் குறையும். பின்னர் நஷ்டயீடு கொடுக்க வேண்டி வரும். ஆகவே 40 என்றே போட்டிருக்கிறோம். மனதிலே ஒரு குழப்பம் இருப்பதால்தான் கொள்கை புறக்கணிக்கப்பட்டது என்று பேசினார்கள். ஸ்ரீ அண்ணாமலை அவர்கள் சொன்னார்கள், கூட்டுறவு முறை சரியாக நடக்கவில்லை என்று. தர்ம ஸ்தாபனங்களின் நிலத்தை சாகுபடி செய்யும் 75 கூட்டுறவு சங்கங்கள் திருப்தியாக நடக்கின்றன. விளைச்சல் அதிகப்பட்டிருக்கிறது. எங்கெங்கு முடியுமோ அங்கு வாலண்டரியாகச் செய்யலாம், இஷ்டப்பட்டால். அதற்கு வசதி செய்து கொடுப்பது என்ற வகையில் இச்சட்டம் இருக்கிறது. கடைசியாக பேசிய அங்கத்தினர் கனம் ஸ்ரீ செல்வராஜன் அவர்கள், கல்வி ஸ்தாபனங்கள், அனாதைக் குழந்தைகளை பராமரிக்கும் ஸ்தாபனங்கள், குழந்தைகளைக் கொண்டே நிலத்தைத் திருத்தி வைத்திருக்கிறார்கள், அப்படிப்பட்டவர்களுக்கு சலுகை—விலக்கு கொடுக்கவேண்டுமென்றார்கள். டெமான்ஸ்ட்ரேஷன் பர்பஸ்-க்கு நல்லபடி சாகுபடி செய்ய வேண்டியிருக்கும், மாணவர்களைக் கொண்டு சாகுபடி செய்ய வேண்டியிருக்கும், உயர்நிலைப் பள்ளியாகயிருந்தால் அவர்களே சாகுபடி செய்வதால் வருமானம் நன்கு வந்திருக்கும். அதை மாற்றினால் வருமானம் குறைந்து போகும். விலக்குக் கொடுப்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து கொடுக்கலாம் என்றிருக்கிறது. தேவை ஏற்பட்டால் அந்தத் தேவையை சமாளிப்பதற்கு இந்த மசோதாவில் இடமிருக்கிறது என்றுதான் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்தத் திருத்தப்பட்ட மசோதாவை இந்த மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Bill, 1961 (L.A. Bill No. 47 of 1961), as amended by the Select Committee, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

DEPUTY SPEAKER : The question is :—

"That clause 2 do stand part of the Bill".

7th December 1961]

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

' In sub-clause (15), delete the words ' but does not . . . agricultural purposes.'

In sub-clause (25) *for* the words ' or of an educational nature ' substitute the words ' nature, undertaking by Government.'

In sub-clause (31), delete the words, ' alone or in association with.'

In sub-clause (28) *for* item (1) *substitute* the following :—

' (1) in any area in the State except the transferred territory—

(*a*) 0.75 acre of wet land assessed to land revenue at the rate of Rs. 15 and above per acre; or

(*b*) 1.00 acre of wet land assessed to land revenue at the rate of Rs. 10 and above but below Rs. 15 per acre; or

(*c*) 1.15 acre of wet land assessed to land revenue at the rate of Rs. 8 and above but below Rs. 10 per acre; or

(*d*) 1.25 acre of wet land assessed to land revenue at the rate of Rs. 6 and above but below Rs. 8 per acre; or

(*e*) 1.50 acres of wet land assessed to land revenue at the rate of Rs. 4 and above but below Rs. 6 per acre; or

(*f*) 1.6 acres of wet land assessed to land revenue below Rs. 4 per acre ; or

(*g* 1.6 acres of dry and assessed to land revenue at the rate of Rs. 2 and above; or

(*h*) 1.75 acres of dry land assessed to land revenue at the rate of Rs. 1·25 and below Rs. 2 per acre; or

(*i*) 2.0 acres of dry land assessed to land revenue below Rs. 1.52 per acre."

DEPUTY SPEAKER : Who is seconding these amendments?

SRI N. MARUDACHALAM rose . . .

DEPUTY SPEAKER : The hon. Member should have seconded the amendments as soon as they were moved. The amendments moved now fall through for want of a seconder.

Clause 2 was put and carried.

Clauses 3 and 4 were put and carried.

Clause 5.

DEPUTY SPEAKER : The question is—

" That clause 5 do stand part of the Bill."

[7th December 1961

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

" *For* sub-clause (1) *substitute the following* :—

'(1) Except as otherwise provided in this Act, no public trust shall personally cultivate land in excess of five standard acres.'

SRI N. MARUDACHALAM : Sir, I second the amendmen,

DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே 5-வ துபிரிவிலே 20 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்றிருக்கிறது. ஏற்கெனவே 10 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்றிருப்பதை 5 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்ருக்கவேண்டும் என்பதற்கான காரணத்தை பொது விவாதத்தின்போது எடுத்துக் கூறினேம். இப்பொழுது, அதில் வருவாய் குறைந்து விட்டது என்பதற்காக வேண்டியோ அல்லது குறைந்துவிடும் என்பதற்காக வேண்டியோ 10 என்பதை 20 என்று ஆக்க வேண்டியது கிடையாது. ஏராளமான வருவாய் இருக்கிறது. பல குத்தகை சாகுபடியிலிருந்தும் வருமானம் கிடைக்கிறது. ஆக வருவாய் குறையக்கூடிய அளவு ஒரு நிலைமையும் கிடையாது. ஆகவே 20 ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்று இருக்கவேண்டிய அவசியமில்லை. 5 ஏக்கர் இருந்தால் போதும் என்ற அடிப்படையில்தான் இத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே இதை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **THE HON. SRI M. BHAKTAVATSALAM** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் முன்பே விளக்கியிருக்கிறேன். ஏற்

1-0 p.m. கெனவே சாகுபடி செய்தவர்களுக்குக் கொடுத்ததுதான்—புதிதாக ஒன்றும் எடுத்துக்கொள்ளவில்லை. குறைந்த பட்சம் 20 ஏக்கர் இருக்கவேண்டும் என்று பொறுக்குக் கமிட்டி போட்டிருக் கிறது. ஆகையால் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள இயலாமைக்கு நான் வருந்துகிறேன்.

The amendment was put and lost.

Clause 5 was put and carried.

DEPUTY SPEAKER : I think the House has no objection to sit for half an hour more and finish the rest of the business.

Clauses 6 to 12 were put and carried.

Clause 13.

DEPUTY SPEAKER : The question is—

'That clause 13 do stand part of the Bill.'

7th December 1961]

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following amendment :—

'Add the following proviso after sub-clause (2) (a) and make consequential changes.

"Provided that the persons to take on lease the land concerned after 15 days of the publication in the newspapers".'

SRI N. MARUDACHALAM : Sir, I second the amendment.

DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், 13-வது பிரிவிலே விவசாயம் செய்வதற்கு ஆட்கள் கிடைக்கவில்லையென்று சொன்னல் அதற்குப் பிறகு அவர்களே முடிவு செய்யவேண்டும், விவசாயம் செய்யவேண்டும் என்ற முறையிலே இருக்கிறது. நான் என்ன சொல்லுகிறேன் என்றல் வேண்டிய அளவுக்கு ஆட்கள் இருக்கிருர்களா இல்லையா என்று நிர்ணயம் செய்வதில் திட்ட வட்டம் ஏதுமில்லை. இந்தக் காரணத்தினல் 15 தினங்கள், தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும், மடத்திற்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும், விவசாயம் செய்ய ஆட்கள் தேவை என்று விளம்பரம் செய்து பிறகு முடிவுக்கு வருவது நலமாக இருக்கும்—நேர்மையாக இருக்கும் என்ற அந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். இதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **THE HON. SRI M. BHAKTAVATSALAM** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே நிலத்தைப் பயிரிட குத்தகைதாரர்கள் வரவில்லையென்றல் முடிவை அவர்களே செய்வதில்லை—ப்ரிஸ்க்ரைப்ட் அத்தாரிட்டி செய்யவேண்டுமென்று இருக்கிறது. இதற்கெல்லாம் நியூஸ்பேப்பரில் விளம்பரம் செய்வதென்றல் செலவாகும். அப்படி இருக்கக்கூடிய நிலம் 5 ஏக்கருக்குள்ளாக இருக்கலாம். அதற்காக பத்திரிகைகளில் விளம்பரம் செய்வது அவசியமில்ல. அதனல் வீண் செலவுதான் ஆகும். ஆகையால் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

The amendment was put and lost.

Clause 13 was put and carried.

Clauses 14 to 17 were put and carried.

Clause 18.

DEPUTY SPEAKER : The question is—

'That clause 18 do stand part of the Bill.'

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move the following amendment :—

'In clause 18, after the expression "section 7", insert the figures and brackets "15(2)".'

This is a verbal amendment.

The amendment was put and carried.

Clause 18 as amended was put and carried.

Clause 19.

DEPUTY SPEAKER : The question is—

'That clause 19 do stand part of the Bill.'

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following amendment :—

'In sub-clause (1) (*a*) of Clause 19,, for the words 'a month after such date' substitute the words 'three months after such date'.'

SRI N. MARUDACHALAM : Sir, I second the amendment.

DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே 19-வது பிரிவிலே ஒரு மாதத்திற்குள்ளாக என்று இருக்கிறது. இதை மூன்று மாதமாக அதிகரிக்கவேண்டும் என்று கருதி நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். காரணம் என்ன வென்றால் கல்டிவேட்டிங் டெனெண்ட்ஸ் ஒரு மாதத்திற்குள் கொடுக்கவேண்டிய கடன்களைக் கொடுக்க வேண்டும். அப்படி திருப்பிக்கொடுக்கவில்லையானால் அவர்களை வெளியேற்றவேண்டும். ஆகையால் மூன்று மாத தவணை கொடுத்து, அது வரையில் பார்த்து, திருப்பிக்கொடுக்க முடியாத நிலை ஏற்படுமானால் சர்க்காரே கொடுத்து நீண்டகால தவணையில் வசூல் செய்யும் அளவில் உதவிசெய்து விவசாயிகளை வெளியேற்றுவதைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஒரு மாதம் தவணை போதாது, இன்னும் அதிகமாக இருக்கவேண்டுமென்று சொன்னால் அதைப் பற்றி யோசிக்கலாம். இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

The amendment was put and lost.

Clause 19 was put and carried.

Clause 20.

DEPUTY SPEAKER : The question is—

'That clause 20 do stand part of the Bill.'

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move the following amendment :—

'In clause 20, in sub-clause (1) and the proviso thereto, for the words 'two months', substitute the words 'six months.'

7th December 1961] [Sri M. Bhaktavatsalam]

The amendment was put and carried.

Clause 20 as amended was put and carried.

Clauses 21 to 23 were put and carried.

Clause 24.

DEPUTY SPEAKER : The question is—

' That clause 24 do stand part of the Bill.'

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following amendments :—

' In item (i) of sub-clause (1) for the figures ' 40 ' *substitute* the figures ' 30 '.'

' In item (ii) of sub-clause (1) for the figures ' 35 ' *substitute* the figures ' 25 '.

' In item (iii) of sub-clause (1) for the figures ' 33-1/3 ' substitute the figures ' 20 '.'

SRI N. MARUDACHALAM : Sir, I second the amendment.

DEPUTY SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 24-வது பிரிவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தங்கள் அதாவது ஃபேர் ரெண்ட் 40, 35, 33-1/3 என்ற முறையில் இருப்பதை 30, 25, 20-ஆக மாற்றிப் போடவேண்டுமென்று ஒரு திருத்தம். இன்றைக்குள்ள விலைவாசி அடிப்படையில், பல வருஷங்களுக்கு முன்னால் இயற்றப்பட்ட இந்த ஃபேர் ரெண்ட் இன்றைக்குப் பொருத்தமாக இல்லை. ஆகையால் விவசாயிகளுடைய நலனைக் கருதி இதைத் திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

